# திருச்செந்தூர்ப்புராண

## வசனம்.

T05693
R002C07
5693

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமுருகன் துணை.

# திருச்செந்தூர்ப் புராணவசனம்.

இது

திரிசிரபுரம் வித்துவான்,

அமிர்தம், சுந்தரநாதபிள்ளை அவர்களால்

எழுதப்பெற்று,

மதுரை, புஸ்தகஷாப், பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு,

மு. கிருஷ்ணபிள்ளை அவர்களால்

வெளியிடப்பெற்றது.

1927.

[ரிஜிஸ்டர் காப்பிரைட்.] — [விலை அணா 10.

# அட்டவணை.


பக்கம்.

| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து ... ... ... ... | 1 |
| 1-வது புராணவரலாறு உரைத்தபடலம் ... ... | 7 |
| 2-வது தமிழ்ப்புராணம் பாடிய அத்தியாயம் ... | 11 |
| 3-வது நைமிசாரணியத்திற் சூதமுனிசென்ற அத்தியாயம் | 16 |
| 4-வது வியாசர் சுகருக்கு உபதேசித்த அத்தியாயம் | 17 |
| 5-வது செயந்திபுர வைபவம் உரைத்த அத்தியாயம் | 21 |
| 6-வது திருவவதார அத்தியாயம் ... ... ... | 33 |
| 7-வது செயந்திபுர அத்தியாயம் ... ... ... | 36 |
| 8-வது வள்ளியம்மையார் திரு அவதார அத்தியாயம் | 43 |
| 9-வது வள்ளியம்மையாரிடத்து முருகப்பிரான் சென்றருளிய அத்தியாயம் ... ... ... | 46 |
| 10-வது வள்ளியம்மையாரின் திருக்கல்யாண அத்தியாயம் ... ... ... ... | 48 |
| 11-வது பிரம்மாவுக்கு வரங்கொடுத்த அத்தியாயம் | 54 |
| 12-வது திரிசுதந்தரர் வரலாறு உரைத்த அத்தியாயம் | 62 |
| 13-வது மாதபூசை விதியுரைத்த அத்தியாயம் ... | 64 |
| 14-வது விபூதி அத்தியாயம் ... ... ... | 69 |

15-வது விசுவரூப அத்தியாயம் ... ... ... 73
16-வது சாமிநாதன் மந்திரமகிமையுரைத்த அத்தியாயம் 78
17-வது பலகதை உபதேசித்த அத்தியாயம் ... 83
18-வது இயமனுக்குச் சிந்துபுர வைபவம் உரைத்த
அத்தியாயம் ... ... ... ... 94
19-வது பிரமன் தேவர்கட்கு உபதேசித்த அத்தியாயம் 97
20-வது சுகப்பிரமரிஷி பூஜைபண்ணின அத்தியாயம் 100

# முகவுரை.

ஆறுமுகக்கடவுள் அமர்ந்தருளும் பற்பல தலங்களிலும் மிகச்சிறந்ததாகப் புவியில் விளங்கும் திருச்செந்தூர் என்னுந் திவ்விய தலத்தைப்பற்றி என் சிறு வயதிலிருந்து கேள்விப்பட்டுத் தரிசிக்க விரும்பியிருந்தேன். அத்திருச்செந்தூர் ஆண்டவன் அருளால் இப்புனித தலத்தை என்னிருபத்தோராவது வயதிலேதான் தரிசிக்கும் பேறு எனக்கு எய்தியது. இத்திருத்தலத்தைத் தரிசித்ததிலிருந்து முன்னிலும் இத்தலத்தும் இங்கெழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளிடத்தும் பத்தியும் புத்தியும் பெருகிச் சித்தமும் ஆங்கே சிக்கென ஊன்றி நின்றது.

லௌகிகத்தில் மிகவும் ஈடுபட்டுள்ள நான் உடனே இத்திருப்பதியைப் பிரியாப் பிரியத்துடன் விட்டு நீங்கி வந்தாலும் இத்திருச்செந்தூரும் இத்திருச்செந்தூர் ஆண்டவன் திருவடியும் சிறியேன் நெஞ்சகத்துக் கன்மேலெழுத்துப் போல் நின்று மலர்ந்து விளங்கிக்கொண்டு நின்றது. இஃதிவ்வாறிருக்க, எவரையும் பற்றும் முன்னை வினைப்பயன் வந்து மூண்டமையால் துன்பமென்பன எல்லாம் மூன்றாண்டுகளாகப் படை யெடுத்து வந்ததாயினும் இம்முருகப்பிரான் திருவருளால் சூரியனைக் கண்டபனிபோல் அவைகள் மிகத் துன்புறுத்தாது என்னைவிட்டு அகன்று போயின.

நிகழும் ரத்தாட்சி ஆண்டில் மார்கழித் திங்களில் திருச்செந்தூர்க் குமரவேள், மஞ்ஞைமிசை அடியேன் கனவினிற் றோன்றி என்னூரிற்குவா, முந்நீரில் மூழ்கு, துன்பந்தொலையும், இன்பம் பெருகும், துன்னு சீரலைவாய், மன்னு மகத்துவம், பன்னும் வனமா உன்னி எழுதுக, அன்றே நலமெலாம் உன்னதாம், கன்றேல், மனங்களி, ஒன்றிடுமுனக்கே என்று கட்டளையிட, உடனே கார்கால விடுமுறை தொட்டு நின்றமையால் சென்னை முதலிய இடங்களுக்குச் செல்வதாக ஏற்பாடுசெய்திருந்த ஏற்பாட்டை விட்டொழித்துத் திருச்செந்தூர் சென்று திருமுருகன் திருவடி மலரைத் தரிசித்துக் கும்பிட்டுத் தொழுது பணிந்து போற்றிப் பாட்டிசைத்துப் பரவிப் பெருங்களிப் பெய்தினேன். இதிலிருந்து படிப்படியாகத் துன்பங்கள் அகன்றோடத் தொடங்கின. இன்பம் பெருகிச் சாரத்தொடங்கின.

இஃதிவ்வாறிருக்க, திருச்செந்தூர் செல்லும் வழியில் மதுரையம்பதியிற்றங்கிச் சொக்கேசப் பெருமானையுந் தடாதகைப் பிராட்டியாரையுந் தரிசித்து மீண்டுவரும் வழியில் புது மண்டபப் புத்தகக்கடையில் என் பழநண்பராகிய திருவாளர் மு. கிருஷ்ணபிள்ளை அவர்களைக் கண்டு அளவளாவிக் கொண்டிருக்கையில் திருச்செந்திற் கந்த நாதன் கருணையிருந்தபடியால், திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டென்னும் ஒரு திருநூலை என்காத்துத் தந்தருளித் திருச்செந்தூர்ப்

புராண வசனம் ஒன்று யாவரும் படித்துணரும்படி எழுதித் தருக என்று வேண்டினர். கனவுக்கும் நனவுக்கும் பொருத்தம் பெரிதும் பொருந்தி யிருந்ததால் இது முருகக்கடவுள் பேரருளே என்று உறுதிகொண்டு ஆண்டவனைப் பரவிக் கனவை என் நண்பருக்குஞ் சொன்னேன். அவரும் வியந்தனர். நிற்க, திருச்செந்தூர் திருக்குற்றாலம் முதலிய இடங்களுக்கு யாத்திரை சென்று திருச்சிக்கு மீண்டபின் செந்தூர் ஆண்டவன் அருளால் ஒருவாறு இப்பிரபந்தத்தை எழுதி முடித்தேன். இதில் அன்பர் மகிழத்தக்கன ஏதேனும் இருப்பின் எல்லாம் திருச்செந்தூர் ஆண்டவன் கருணைத்திறம் என்று எண்ணி அவனிடத்துப் பத்தி செலுத்துவார்களாக. என்னை ஆசீர்வதிப்பார்களாக. ஆண்டவன் அருள்பெருகக் கிடைத்தும் எளியேனின் அறியாமையால் வழுக்கள் ஏதேனும் ஈங்குக் காணப்படுமாயின் அதனை என்பாலதாக்கி இதற்காக இரங்கிப் பரிந்து இனி இவ்வாறு எனக்கு வழு எய்தா திருக்க முருகனை என் சார்பாகவேண்ட இதனை வாசிக்கும் பெரியார்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,

முருகப்பெருமான் அடியார்க்கடியேன்,

அ. சுந்தர நாதன்.



சுப்பிரமணியர்.

உ

திருமுருகன் றுணை.

# திருச்செந்தூர்ப் புராண வசனம்.

## கடவுள் வாழ்த்து.

### விநாயகர் காப்பு.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

உலகத் தெவரும் உவந்தேத்த ஓங்கி நின்ற பெருமானை
இலகத்திருநூலெல்லாமுன் எண்ணித்துதிக்குமெழிலானைக்
குலவுமுக்கட்குஞ்சரத்தைக் கும்பிட்டேத்தித்தொழுதேற்கு
நிலவு செந்தூர் வசனமினி நோாய் எழுத வந்திடுமே.

### சிவபெருமான் துதி.

அறுசீர் விருத்தம்.

என்றுமுளோன் அழிவில்லோன் பேரின்பப் பெருஞ்சுடரா
யெங்கு நிற்போன்
நின்றுபதாம் புயந்தொழுவோர்க் கருளுருவன் சிவனென்னு
நீர்மை தோன்ற
முன்றணவா தெழுந்தவிடங் கண்டஞ்சுந் தேவரெலாம்
முன்வந் தேத்தத்
துன்றுமனோர் பயமகற்றி யதுவுண்டே ஒளிர்பானைத்
துதித்து வாழ்வாம்.

## பார்வதி துதி.

இதுவுமது.

ஐவண்ணப் பெருமானார் அவனியெலாம் ஆக்கியருள்
ஆணை செய்ய
மெய்வண்ணப் பங்கமைந்து கலந்திருந்து பசுக்கடமை
மேவிக் காக்கும்
மைவண்ண எழில்விழிகொள் உமையாளை அண்டமெலாம்
வயிற்றிற் றாங்கி
உய்வண்ணஞ் செய்தருளும் பராபரையை உள்ளுருகி
ஓதி வாழ்வாம்.

## விநாயகக்கடவுள் துதி.

ஷை வேறு.

முந்தொளிர் வேத ஓமின் உருவொடு பொருளும் ஆதல்
தந்தியம் படிவங் காட்டத் தனக்குமேற் றலைவன் இன்மை
அந்தளிர்க் கரத்துத் தாங்கும் அங்குசம் பாசங் காட்ட
வந்தென துளத்து வைகும் மதகரி சரணம் போற்றி.

## முருகக்கடவுள் துதி.

ஷை வேறு.

மேல்விளங்கும் நான்மறையுந் தேடியலுத் தினுங்காணு
மேலோன் முன்னாள்
நால்வருக்குக் கல்லாலின் நிழலிருந்தொள் அறமுரைத்தோன்
நயந்து கேட்கச்

சால்புமிகு மோம்பொருளை விரித்துரைத்த குருபானுஞ்
சாமி நாதன்

மால்வழுத்தும் வேல்வழுத்தி நூல்வழுத்துங் கால்வழுத்தி
மகிழ்ந்து வாழ்வாம்.

## வள்ளிதேவானையார் துதி.

ஷ வேறு.

மன்னுசிவன் மைந்த னாகும்
மயிலூறும் முருகன் றேருள்சேர்
நன்னுதலின் பாவை மார்கள்
நவில்வள்ளி தேவ யானை
இன்னினிய பாதப் போதென்
னிதயதடத் தென்று நின்று
துன்னிமலர்ந் திட்ட வின்பச்
சுகநறவம் பெருகு மாதோ.

## மயில் சேவல் அயில் துதி.

ஷ வேறு.

சங்கரன் பெற்ற பாலன் தடக்களிற் றுருவன் எங்கள்
ஐங்கரன் றம்பி யாகும் அறுமுகன் மூங்நான் காகும்
செங்கரன் ஏறும் மஞ்ஞை சேவலங் கொடியோ டன்னான்
துங்கநல் வேலும் போற்றித் துதிக்குமென் உள்ள மாதோ.

## வீரவாகுதேவர் வணக்கம்.
### கோச்சகப்பா.

ஊறுமது மலர்க்கடம்பன் ஒளிர்மலர்த்தாள் பணிந்திறைஞ்சி
ஆறுமுகன் றம்பியென வவனியெலா மெடுத்தோத
வீறுமிகு வாளேந்தி வேன்முருகன் குறிப்பொழுகுங்
கூறுதிறல் வீரவா குவடியுள்ளங் குறித்திடுவாம்.

## திருஞானசம்பந்தர் துதி.
### அறுசீர் விருத்தம்.

சங்கர னருளத் தேவி தருதிருப் பாலை யுண்டு
பொங்குநன் ஞான மூறப் பொருந்திய வாண்டு மூன்றில்
துங்கநற் றமிழின் பாக்கள் சொற்றருள் காழிப் பிள்ளை
பங்கயத் தாள்கள் போற்றிப் பார்மிசை நெடிது வாழ்வாம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள் துதி.
### ஷை

உமைதிருப் பாலை யுண்ட உயர்திருக் காழி மைந்தன்[றோன்
அமைவுற அப்பா வென்றே அழைத்திடும் பெருமை பெற்
இமையவ ரமுத மென்ன இன்கவி பாடும் நாவின்
தமைநிக ரில்லா வேந்தின் றுண்மலர் பாவி வாழ்வாம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி.

ஷை வேறு.

நாவலொடுஞ் சிவபெருமான் ஆளாகி வந்தணைந்தே
ஆண்டு கொள்ளப்
பூவலயங் கொண்டாடப் புங்கவனின் றோழனெனும்
பொற்பும் பூண்டு
பாவையொரு பரவையகம் பானிருகாற் றூதுசெலப்
பாடு மெங்கள்
நாவனகர்ச் சுந்தரரைச் சிந்தைகொடு நனிதுதித்து
வாழ்வன் நானே.

## மணிவாசகப்பெருமான் துதி.

ஷை வேறு.

நீர்சுமந்த வேணி யோனை நிலம்வந்து வையைக் கோட்டிற்
பேர்சுமந்த கூலி யாளாய்ப் பெருங்கூடை மண்சுமக்கச்
சீர்சுமந்த மணியாஞ் சொல்லாற் சிறந்தகவி பாடு மெங்கள்
ஏர்சுமந்த வாத வூரர் இணையடியென் முடிய தம்மா.

## வாணி துதி.

ஷை

வெள்ளைநிற மேனி யாளை வெண்கமல மேவு வாளைத்
தெள்ளுமணி மாலை வீணை திகழ்சுவடிக் கையி னாளைத்
விள்ளுமனப் புள்ளி னூரும் வேதியனின் நாவி னாளை
உள்ளியுளி யுள்ள முற்றும் ஓங்குகலை வீங்கு மாலோ.

## அவையடக்கம்.

ஷை வேறு.

கந்தனொரு கான்மலர்க்கே கருத்தேறக் கனிந்துருகிக்
 கடைய னாயேன்
சிந்தையொடு செந்தூரின் மான்மியமா மிந்நூலைத்
 தெரிய யார்க்கும்
பைந்தமிழின் வசனமதா யெழுதினனாற் குற்றமிதிற்
 பாரார் கற்றோர்
எந்தைகுரு பரன்குகனின் சீரொன்றே கொழித்தெடுக்கும்
 எழில ரன்றோ.

# 1-வது புராணவரலாறு உரைத்தபடலம்.

அறுசீர் விருத்தம்.

ஆழியிடைக் கொக்காய் நின்ற அடற்சூர பன்மன் றன்னை
வாழிவடி வேலை விட்டு வளவிரண்டு கூறாய்ச் செய்ய
கோழிமயி லவைக ளாகக் கொடியூர்தி என்னக் கொண்ட
ஊழிமலி கொற்றக் கந்தன் உவந்தமருஞ் செந்தில் வாழி.

உலகம் எல்லாங் கொண்டாடித் துதிக்கும் குமாரக் கடவுள் எழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவற்றுள்ளும் மிகச் சிறந்ததாகிய "திருச்செந்தூர்" என்னுந்தலம், முன்னாளில் கடல்மத்தியில் மாமரமாகநின்ற சூரபன்மனை முருகக்கடவுள் தன் கைவேலால் இருபிளவாக்கி அப்பிளவுகள் முறையே மயிலுஞ் சேவலுமாக அவற்றுள் மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டு எழுந்தருளி இருக்கும் தலமாகும்.

சூரபன்மன் மாமரமாக ஆழிமத்தியில் நின்ற காரணத்தையும் சுப்பிரமணியக்கடவுள் வேல்விடுத்து இருகூறாக்கிய காரணமுஞ் சுருக்கிச்சொல்வோம்.

முன்னொரு கற்பத்திலே, 'பிரபாகரன்' என்னும் அரசனின் மனைவியாகிய 'சுகுமாரி' என்பவள் ஒரு கருவில் இரண்டு பிள்ளையையும் அதன்பின் தனித்தனி ஒவ்வோர்

கருவில் இரண்டு பிள்ளைகளையும் ஆக நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். பிதாவாகிய பிரபாகரன் அந்நான்கு பிள்ளைகளுக்கும் முறையே சூரன், பன்மன், சிங்கன், தாரகன் என்னும் பெயர்களைவைத்து வளர்த்துத் தக்கவயது வந்தவுடன் தன் அரசாட்சியை அவர்களிடம் ஒப்பித்துத் தான் தன் மனைவியொடு நகரத்தைவிட்டு நீங்கிக் காட்டில் தவஞ் செய்துகொண்டிருந்தான்.

சூரன் முதலிய நால்வரும் சாகத்தீவை அரசாட்சி செய்துவருங் காலத்தில் அகத்திய முனிவர் எழுந்தருளி வந்து சூரன்,பன்மன் என்னும் இருவர்க்கும் முருகக்கடவுள் அற்புதசரித்திரத்தைப் பத்திபெருகுமாறு உரைத்தருளினர். அதேபோலக் கிரணவிக்கிடப முனிவர் வந்து சிங்கன், தாரகன் என்னும் இருவர்க்கும் முறையே துர்க்கை, ஐயனர் சரித்திரங்களை எடுத்துப் பத்திபெருக உரைத்தருளினர்.

இவ்வுபதேசங்களைக் கேட்டவர்களில் பன்மன் முருகக்கடவுளின் கோழிக்கொடியாகவும், சூரன் அந்த முருகக்கடவுளுக்கு வாகனமாகிய மயிலாகவும், சிங்கன் துர்க்கையின் வாகனமாகவும், தாரகன் ஐயனர் வாகனமாகிய யானையாகவும்ஆக விரும்பித் தங்களுடைய புத்திரரைச் சாகத்தீவத்தைக் காக்கும்படி அவர்களிடம் அத்தீவை ஒப்பித்துவிட்டுத் தாங்கள் திருக்கைலாச மலைப்பக்கத்திலே சென்று நாற்பதினுயிர வருடங்கள்வரை தவஞ்செய்துகொண்டிருந்

தனர். இவர்கள் இவ்வாறு தவஞ்செய்துகொண்டிருக்கை யில் சிவபெருமானைத் தரிசித்தற்பொருட்டு முருகக்கடவுள் முதலிய தேவர்கள் தங்கள் தங்கள் வாகனங்களாகிய மயில் முதலியவற்றில் ஏறிவந்து அவ்வாகனங்களை வெளியே நிறுத்திவிட்டுப் பெருமானைத் தரிசிக்க உள்ளே சென்றனர். அப்பொழுது முருகக்கடவுள் வாகனமாகிய மயிலும், கொடியாகிய கோழியும், துர்க்கை வாகனமாகிய சிங்கமும், ஐயனார் வாகனமாகிய யானையும் இந்நால்வருந் தவஞ்செய்யும் நோக்கங்களைக் கேட்டறிந்து சினங்கொண்டு நீங்கள் எங்கள் பதவிகளை அபகரிக்கத் தவஞ்செய்வதால் பூதங்களாவீர்களாக என்று சபித்தனர். உடனே நால்வரும் அந்தவிதமாகவே மயில், சேவல், சிங்கம், யானை ஆகிய இவைகளின் முகங்களை முறையேபெற்றுப் பூதமாயினர். அண்டாபாணனென்னும் பூதத்தலைவருக்கு ஏவல் செய்தொழுகினர். இவ்வாறு இவர்கள் இருந்துவரும் காலத்தில் பின்னுமொரு தினத்தில் முருகக்கடவுள் முதலியோர்கள் கயிலைக்கு வந்து தங்கள் தங்கள் வாகனங்களை வெளியே விட்டுச் சிவபெருமானைத் தரிசிக்க உள்ளே சென்றிருக்கும்போது இந்நால்வரும் மயிலையுஞ் சேவலையும் நோக்கி உங்களை விஷ்ணு பிரமன் முதலிய தேவர்கள் வாகனங்கள் வணங்காத காரணமென் எனக்கேட்டு விரோதமுண்டாக்கிக் கோபமூட்டிவிட்டனர். உடனே மயிலுஞ் சேவலும் கருடன் அன்னம்

முதலியவற்றோடு போர்செய்து அவைகளைக் கொன்றன. இதனையறிந்த முருகபிரான் இத்தீச்செயலை உண்டுபண்ணிய அப்பூதவீரர்களை அசுரகுலத்திற் போய்ப் பிறக்கச்சபித்தார்.

இச்சாபத்தைப்பெற்ற பூதவீரர் நால்வருள் சூரனும், பன்மனும் காசிபமுனிவருக்கு மாயை வயிற்றிலே ஒரு சரீரத்தை எடுத்துப் பிறந்தனர். மற்றையஇருவரும் அந்தமாயை வயிற்றிலேயே தனித்தனி ஒவ்வொரு சரீரத்தை எடுத்துப் பிறந்தனர். இம்மூவரும் பதினுபிர வருடமாகப் பற்பல யாகங்களைச்செய்து கைலயங்கிரி வாசராகிய சிவபெருமானிடத்தில் மிக்க உயர்ந்த வரங்களைப் பெற்றனர். இந்த வரங்களைப் பெற்ற செருக்கால், பிரம்மா விஷ்ணு முதலிய பெருந்தேவர்களிடத்தும் இந்திரன் முதலிய மற்றைத் தேவர்களிடத்தும் இவர்கள் சென்று யுத்தம்செய்து வென்று அவர்கள் செல்வங்கள் எல்லாவற்றையுங் கவர்ந்து அசுரர்கள் மனமகிழும்படி கடலின் நடுவே மகேந்திரபுரி என்னும் ஒரு பட்டணத்தை உண்டுபண்ணி அதிலிருந்துகொண்டு நூற்றெட்டு உகங்கள் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசாட்சி செய்து இன்பத்தோடு வாழ்ந்துவந்தனர்.

இவர்கள் இடுக்கண் பொறுக்கமுடியாமல் இந்திராதி தேவர்கள் சிவபெருமானிடத்திற் சென்று முறையிட்டுக் கொள்ள கருணாமூர்த்தியாகிய சிவபெருமானரின் ஆறு திருமுகங்களிலுமுள்ள நெற்றிக்கண்களிலிருந்து ஆறுதீப்பொறி

கள் தோன்றின. அதனை அக்கினியும் வாயுவும் சிரமத்தொடு தாங்கி சிவபெருமானருளாற் கங்கையிற் சேர்த்தனர். கங்கை தன் சரவணப்பொய்கையில் சேர்த்தனள். ஆங்கு ஆறு குழந்தைகளாயின. கார்த்திகை முதலிய பெண்கள் சிவபெருமான் ஆஞ்ஞையால் பாலூட்டி வளர்த்தனர். சிவபெருமானும் உமாதேவியாரும் ஒருசமயம் அங்குவந்தபோழ்து உமாதேவியை நோக்கிச் சிவபெருமான் உன் செல்வரைக் காணென அவளும் புத்திர வாஞ்சையால் தழுவி எடுக்க ஆறு உருவமும் ஒருருவமாகி ஆறுமுகமும் பன்னிரு கரத்தொடும் விளங்கிற்று. அப்பாலர்க்குக் கந்தன் எனப்பெயரிட்டு அருள் செய்து சென்றனர்.

இக்குமாரர் வீரவாகு முதலிய வீரருடன் இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனையுஞ் சூழ எழுந்தருளிவந்து யுத்தஞ்செய்து மாமரமாக நின்ற சூரபன்மனைத் தமது சத்திவேலாலே இரண்டு கூறுக்கிக் கொன்றருளினர். இரண்டு கூறுகிய மாமரம் பூர்வத்தே செய்த தவத்தால் மயிலும் சேவலுமாக ஆயின. குமரக்கடவுள் கருணைகூர்ந்து மயிலை வாகனமாகவும் கோழியைக் கொடியாகவுங் கொண்டருளினார்.

இவர் சூரபன்மனைக் கொன்று வெற்றி பெற்றபின் தேவர்கள் வேண்டுகோளால் இந்தத் திருச்செந்தூரில் கோயில்கொண்டு எழுந்தருளி இருந்து எல்லோருக்கும்

அருள் செய்தனர். இதுதான் இத்திருச்செந்தூரில் முருகர் கோயில் கொண்ட வரலாறு.

---

## 2-வது தமிழ்ப்புராணம் பாடிய அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

ஒன்றுகல்விஒன்றுமிலா ஓங்குகோயின்மடைத்தொழிலான்
வென்றிமாலைஎனும்பனவன் விளங்குமின்பத்தமிழ்ப்பாவால்
துன்று சீர்த்திச் செந்தூரின் தூய மான்மி யந்தன்னை
நின்று கூற வருள்செய்த நிறைசெந் தூரன் கழல்போற்றி.

திருச்செந்தூர்த் திருக்கோயிலில் சில நூற்றுண்டுகளுக்குமுன் வென்றி மாலை என்னும் பிரம்மச்சரிய பிராமணன் பரிசாரகத்தொழில் செய்துகொண்டிருந்தான்.

ஒருநாள் தெய்வச்செயலாய் இவன் திருச்செந்தூர் முருகக்கடவுள் பூஜைக்கு நைவேத்தியத்தைச் சற்றுத் தாமதித்துக் கொண்டுவந்தான். அதனுல் கோயிற்றலத்தார் கோபித்து அவனைத் தண்டித்தார்கள்.

அவர்கள் தண்டித்த தண்டனை வேதனை பொறுக்க மாட்டாமல் இந்தவிதமாக வயிறுவளர்ப்பதைக் காட்டிலும் இறந்துபோவதே நல்லதென்று எண்ணிக் குமரக்கடவுளை மனத்திற் சிந்தித்து வந்தித்துவிட்டுக் கடலிற்போய் விழுந்

தான். அப்போழ்து, செந்தூர்வாழும் கந்தக்கடவுள் வந்து தோன்றி அவனைக் கரைஏற்றி இனி அஞ்சேல் உமக்கருள் செய்வோம் என்றுகூறி இந்தச் செந்தூர் மான்மியத்தைப் பாடுக என்றருளினர்.

அதற்குப்பிராமணன் 'ஆண்டவனே! நான் எழுதப்படிக்கத் தெரியாமூடனுயிற்றே! எப்படிப் பாடுவேன்' என்று போற்றிநின்றான்.

அதற்கு முருகப்பெருமான் நீ செவ்வலூரில் இருக்கும் கிருஷ்ணசாஸ்திரிபாற் சென்று செயந்தியம்பதி மான்மியம் என்று வடமொழியில் வழங்கும் இந்தச் செந்தூர்மான்மியத்தைக்கேள். உனக்கு உடனே பாடும் ஆற்றல் உண்டாகும் என்று அருள்செய்து மறைந்தார். வேதியனும் அவ்வாறே அந்தக்கிருஷ்ணசாஸ்திரியாரிடம்சென்று நிகழ்ந்தனவெல்லாங் கூறினன். சாஸ்திரியாரும் வியந்து கேட்டுச் செந்தூராளி உள்ளத்திருந்து தூண்ட செயந்தியம்பதி மான்மியத்தை வடமொழியிலிருந்தபடி தமிழில் மொழிபெயர்த்து உரைத்தார். உடனே வென்றிமாலை என்னும் வேதியர் எல்லா அழகும் அமையத் தமிழ்ப்புலவர் உச்சிமேற்கொண்டு மெச்சிக்கொண்டாடும்படி தமிழ்ப்பாவால் புராணத்தைப் பாடிமுடித்தார். சாஸ்திரியாரும் மற்றையருங் கண்டு வியந்து செந்தூர்க்கந்தன் அருள்விளையாட்டெனக் கொண்டாடி ஆண்டவன் கருணையைப் போற்றினர்.

பாலுந் தேனும் கலந்த பண்புபோலவும் பதமாவடித் தெடுத்த சர்க்கரைப்பாகோ எனவும் பாடிய புராணத்தை அரங்கேற்றுதற்குத் திருச்செந்தூருக்கு வென்றிமாலை என்னும் இவ்வேதியர் வந்தார்.

அங்குள்ள திரிசுதந்தரத்தரென்னும் தலத்தோர்கள் கல்லாப் பூசைநெறி நில்லா மடையன்பாட்டை ஏற்றுக் கொள்ளமாட்டோமென மறுத்துவிட்டனர். குமரக்கடவுள் திருவருள் பெற்ற அருட்கவியாகிய வென்றிமாலை என்னும் வேதியன் மனநொந்து "செந்தூரானே! இந்தா புராணம், கொந்தளிப் போங்கும் முந்தலைக் காத்துத், தந்தனன் காணுதி தந்தனன் காணுதி, உந்தன் கருணை உந்தப் பாடினன், அந்தண ரேற்கச் சிந்தை கொண்டிலர், நொந்தென் செய்வன் எந்தன் விதிக்கே, கந்த தமிழ்ப்பெரு மைந்த, வந்தன முனக்கே வந்தன முனக்கே" என மொழிந்து ஏட்டை விசிறி மலைபோலோங்கி ஒலித்து மடங்கிச் சுருண்டு வரும் அலைகடலில் எறிந்துவிட்டு அவ்விடம் விட்டுச் சென்றனர்.

எறிந்த ஏடோ கடலில் மிதந்து சென்று ஈழநாட்டின் கரையை அடைந்தது. அதனைக் கண்ட ஒருவன் அதனை எடுத்துத் தன்வீட்டிற் கொண்டுபோய்ப் பத்திரப்படுத்தி வைத்தான். இவ்வேடுகள் இவன் வீடுசேர்ந்த நாளிலிருந்து இவன் வீடு செல்வமிகுந்து எல்லோருக்கும் சுகம்பெருக

ஆரம்பித்தது. அந்தவூரில் "சக்கரசுவாசம்" என்னும் பெருங் காற்று அடிக்கடி தோன்றிப் பெரு நஷ்டம் உண்டாக்கிக் கொண்டிருந்தது. குமரன் திருவருளால் இந்த ஏடு வைத்திருக்கும் வீடுள்ள வீதியில் மட்டும் அக்காற்று வாதிருந்தது. இதென்ன வியப்பென்று எல்லாரும் ஆச்சரியப்பட்டனர். செந்தூர் அயில் வேலன் அவ்வூரார் கனவிற்றோன்றி எனது செந்தூர்ப் புராணத்தை எழுதிப்படித்துப் பூசியுங்கள், உங்களுக்குத் துன்பமிலதாகும். அந்தத் தெருவில் மாத்திரம் அப்பெருங்காற்று வந்து வேதனை செய்யாதிருப்பதற்குச் செந்தூர்ப் புராணம் இருத்தலே என்று புராண வரலாற்றை ஆதியோடந்தமாகக் கூறியருளினர். உடனே ஊரார் எல்லோரும் ஒன்றுபோலக் கனுக்கண்டதை ஒருவர்க்கொருவர் சொல்லி எல்லாங் குமரன் அருள்விளையாட்டென்று கொண்டாடி அவ்வேட்டை வேண்டி எழுதிப் படித்துப் பூசித்து வரத்தலைப்பட்டார்கள். அதிலிருந்து அவ்வூர்க்கு வாதனை நீங்கிச் சுகம்பெருகிற்று. இதுகண்ட தமிழ்த் தேயத்தாரெல்லாரும் இதனைப்பரிந்துளழுதிப்படித்துப் பூசித்துச் சுகமடைந்தனர். பின்னர் கடைசியாகத் திருநெல்வேலி நெல்லையப்பக் கவிராயரும் சுப்பிரமணியக் கவிராயரும் பலருக்கும் பயன் படும்படி எழுதுவோரால் ஏற்பட்ட பிழைகளைத் திருத்தி அச்சிட்டு உலகுக்கு உபகரித்தருளினர். அவரும் அவர் புகழும் அவர் குலமும் குமரனருள் பெற்று வாழ்க.

---

## ௩-வது நைமிசாரணியத்திற் சூதமுனி சென்ற அத்தியாயம்.

சொல்லுதிருப் புராண மெல்லாஞ்
சுலவுகடல் வைப்போர் தேற

நல்லபயன் எய்த வென்றே
நவின்றருளும் சூதன் முன்னாள்

வல்லபெரு தவத்தோர் காண
வளநைமி சாரண் யத்தில்

பல்லவரும் போற்ற வந்த
பயனேதிப் போற்றி வாழ்வாம்.

உலகத்தவர் எல்லாம் பாராட்டிப்பேசும் நைமிசாரண்ய வனத்திற்குக் கௌதமர், வசிட்டர், மங்கணர், அகஸ்தியர், சத்தியர், வேதவாதியர், நாபத்தம்பர், மாண்டவியர், வாமதேவர், விருபாக்ஷர், விசுவாமித்திரர், பிருகு, சருக்ஷரன், சாபங்கர், காத்தியாயர், கற்கர், கவண்டர், தூம்பிரர், அணிமாண்டவியர், வசு, போசனர், பன்னுசனர், மதங்கசர், பராசரர், ஸ்ரீவசு, தவுமியர், கணுதிபர், பாத்துவாசர், ஆங்கீரதர், சிலாதர், ருசியசிருங்கர், சாபாலி, அத்திரி, சமதக்கினி, சனியார்க்குவதர், காசிபர் முதலிய தபோதனர்களும், அவர் சீடர்களும், அச்சீடர்களின் சீடர்களும், அம்முனிவர்கள் பத்தினிமார்களும், விருந்தினர்களும் வந்தனர். அந்தச் சமயத்தே சூதமுனிவரும் எழுந்தருளிவந்தார்.

இவர்களைச் சவுனகர் முறைப்படி முகமன்கூறி வரவேற்று அருக்கிய முதலித் தருப்பையாசனந்தந்து சூதமுனிவரைத் தொழுது வணங்கிப் பதினெண் புராணங்களை விரித்துரைத்து எமக்கு அருள்செய்யும் பெருந்தகையே! அசுரர்களென்னுங் கடலைச் சுவற அழித்துச் சூரபன்மாதியரைக் கொன்றருளிய குமரக்கடவுள் குடிகொண்டருளி இருந்து எல்லோர்க்கும் இன்பருளும் திருச்செந்தூர் மகத்துவத்தைக்கூறி யருளவேண்டுமென்று கேட்க, சூதமுனிவர் மனக்களிப்பெய்தி ஆனந்தக்கண்ணீர் பெருக மெய்மயிர் பொடிப்ப முறையே விநாயகக்கடவுளையும் சுப்பிரமணியக் கடவுளையும் மற்றைய தேவர்களையும் முறைப்படி உள்ளுருகத் துதித்து, கேளும் சவுனகாதி முனிவர்களே! என்று அங்குள்ள சவுனகரையும் மற்றைய முனிவர்களையும் நோக்கிச் சுகப்பிரமரிஷிக்கு வேதவியாசர் வகுத்தருளியபடி உங்களுக்குக் கூறுகின்றேன். பத்திசிரத்தையோடு கேளுங்கள் தபோதனர்களே என்று கூறுகின்றார்.

---

## ச-வது வியாசர் சுகருக்கு உபதேசித்த அத்தியாயம்.

பெருந்தலங்கள் தமிலிருந்து பேணுபல மகம்புரிந்தோர்
திருந்துறமுன் பெரும்பயனிற் றிகழ்பல்லா யிரமடங்கு
பொருந்ததிகம் பெற்றிடுவர் புகழ்ச்செந்தூர் முகாரம்ப
அருந்துறையிற்படிந்துகுகன் அணிமலர்த்தாள்பணிந்தவரே.

ஓ நைமிசாரண்ய வாசிகளே! கேளுங்கள்! நான்கு வேதங்களையுஞ் சிக்கறுத்து விளங்க விரித்தருளிய வியாசமுனிவர் புனித நதியாகிய கங்கைநதியின் மூலத்து அழகிய கரையில் வந்தருளியிருந்தார். அப்படி எழுந்தருளியிருந்த வியாசமுனிவரை சுகமுனிவர் தொழுது பொருநையாற்றின் தெற்கேயுள்ளது செயந்தி நகரம் என அடியேனுக் கருள் செய்தீர். அந்தச் செயந்தி நகரென்னும் செந்தூரின் மகத்துவத்தையும், அங்கெழுந்தருளி இருக்கும் குமரக்கடவுள் பெருமையையும் எனக்கு எடுத்துச் சொல்லியருள வேண்டுமென்று பாதத்தில் வீழ்ந்து இறைஞ்சி வேண்ட, வியாசர் சுகரை நோக்கி மகிழ்ந்து, உன் விருப்பம் நன்றே. கேட்பாயாக. நான் அந்தச் செந்தில்மா நகரத்துச் சிறப்பும் ஆங்கு எழுந்தருளி இருக்கும் குமாரக்கடவுளின் வைபவமுங் கூறுகின்றேன் என்று கூறுகின்றார் என்று நைமிசாரண்ய வாசிகளாகிய சவுனகாதி முனிவர்களுக்கு சூத முனிவர் கூறுகின்றார்.

கேளும் சவுனகாதி முனிவர்களே! வேதவியாசர் சுகருக்குச் சொல்லுகின்றார்.

ஞானவீட்டிற்குத் திறவுகோலைப்போன்ற இத்திருச்செந்தூர் எட்டுயோகத்தோர் மதிக்கத்தக்க நெஞ்சப்பெருந்தீபம். சுப்பிரமணியக் கடவுளுக்கு திருக்கோயிலாக அமைந்த திருத்தலம். இந்தத் திருச்செந்தூரில் எவனேனும் ஒரு

வன் வந்து கோயிலுக்குச் சமீபத்துள்ள தெள்ளிய அலைகளையுடைய கடலிலுள்ள முகாரம்ப தீர்த்தத்தில் ஒருமுறை மூழ்கி, குமாரக்கடவுள் திருவடியை மூன்றுமுறை தொழுவானுனல் தேவர்களும் முனிவர்களும் மற்றையரும் சீக்கிரம் வந்து, தொழுத அவன் அடியைத் தொழும் பேறு பெறுவான் என்றால் இதன் மகத்துவஞ் சொல்லவும் வேண்டுமோ. இந்த முகாரம்ப தீர்த்தத்தில் மூன்றுநாள் முறையே முழுகிக் குமரக்கடவுளை வேதவிதிப்படி சோடச விதியினுல் அர்ச்சித்தவர்கள் வெள்ளையானையின் மீதேறி வரும் இந்திரனும் மற்றைத் தேவர்களும் வந்தனைபுரிய மேன்மையோடு விளங்கவிருப்பர்.

இந்தத்தலத்திலிருந்து வேற்கைக்கடவுள் ஆறெழுத்தில் ஒரெழுத்தை ஓதினவர்க்கு அசுவமேதயாகம் ஆயிரங்கோடிசெய்த பலமும், நான்முறையாகச் செய்த பலகோடி வேள்விப் பயன்களும், கெடாதபல அரிய மகா தவத்தைச் செய்த பயன்களும், தெய்வத்தன்மை வாய்ந்த கடவுளர் தரும் கதித்தொகைகளும், கங்கை முதலிய புனித தீர்த்தங்களில் ஆடிய பயனும், திங்களையணிந்த சிவபெருமான் வீற்றிருந்தருளும் சிவ கைலையைத் தரிசித்த பெரும் பேறும், இன்னும் அளவிட்டுச் சொல்லமுடியாத நற்பேறுகளும் இத்தலந்தந்திடும்.

வேத முழங்கும் இந்தச் செயந்திபுரத்தில் இருந்து வாழும் மக்கள் முற்பிறப்பில் எண்ணற்கரிய பெருந்தவஞ்

செய்தவர்களேயாவர். இந்தத்தலத்திலுள்ளவர் செய்யும் தருமத்துக்குப்பயன் மற்றைத்தலத்திலிருந்து செய்த தருமத்திற்கு ஒன்றுக்குக் கோடியாகும். இந்தத்தலத்தில் எழுந்தருளியிருக்கும்ஆறுமுகக்கடவுளைத் தரிசித்தவரே கண்ணைப் பெற்ற பயனை அடைந்தவர் ஆவர். இத்தலத்து ஆறுமுகப் பெருமான் புகழை உரைக்கும் நாவுடையவர்களே நாவைப் பெற்றதின் பயன் பெற்றவராவார் என்று வேதங்கள் கூறுகின்றன.

பிரமனும் விஷ்ணுவும், சிந்துபுரத்துள்ள மாந்தர் நம்மைச் சிறிதுஞ் சட்டைசெய்யார் என்று கூறுவாரானால் இதன்பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ.

யாராயிருந்தாலும் பிறந்ததிலிருந்து இறக்கும்வரைபெரிய தவங்களைச் செய்திட்டாலும், சருகே உண்டுகொண்டு இருந்திருப்பினும், பலதானங்களைச் செய்தாலும் ஒப்பற்ற இந்தச் செயந்தியம்பதியில் ஒருநாள் உபவசியாதவர்க்கு அவர் பிறப்பு வீணாகியழியும்.அவர் ஜன்மம் பசுச்சென்மமே. சுகா! இதை நீ அறி என்று வேதவியாசர் சொல்லியருளி மேலுஞ்சொல்லுகின்றார் என்று சூதர் சொல்லுகின்றார். சிந்துபுரமே தேவலோகம். இதில் வசிப்பவர் தேவரே. இதில் வசிப்பவரோடு பேசும் வார்த்தைகள் இருக்குவேத மந்திரமாம். இந்நகர்வாசிகளோடு எவரேனுஞ் சேர்ந்து வசித்தால் பெருதற்கரிய பெருங்கதியை யடைவார். இப்பொழுது

நானுனக்குச் சொல்வனவெல்லாம் ஸ்ரீமந்நாராயணன் முன்னுளில் சனற்குமாரற்கு மொழிந்தருளிய இரகசியமாகும். இன்னுஞ்சொல்வேன் கேள். உள்ளத்துறும் பகையாகிய காம, குரோத, உலோப, மோக, மத, மாச்சரியம் என்னும் ஆறு தீக்குணங்களையும் அடியோடு நீக்கிப் பேரின்பப்பயனை அடையவிரும்பினுல் ஒருமூன்றுபகற்பொழுது முருகனை உள்ளன்போடு துதித்துக் கடலிலுள்ள ஆரம்பதீர்த்தத்தில் முழுகிக் கரையேறினுர் கரையேறுவார். வேதக்கரைகண்ட சுகா என வேதவியாசர் கூறி இன்னுங் கூறுகின்றுர். உனக்குக் கூறும் இந்த உண்மைச் சரித்திரத்தை நினைத்து ஏட்டில் எழுதினவரும், தினம் படித்தவரும் மகிழ அவர் இருதய மலரில் சரவணப்பெருமான் மகிழ்ந்து வீற்றிருப்பான். இது சத்தியம் என்று சுகர்க்குக் கூறியருளினர் வியாதமுனிவர் என்று சூதர் நைமிசாரண்ய முனிவர்களுக்கு உரைத்தருளினுர்.

---

## ௫-வது செயந்திபுர வைபவம் உரைத்த அத்தியாயம்.

### எண்சீர் விருத்தம்.

இணையிலாத் திருஞானம் இன்பஞ் செல்வம்
எழிற்பேறு பவநீக்கம் எண்ணப் பேறு
மணிவடிவேற் குகன்கிருபை வண்மை தேசு
வானுலக சுகபோகம் மாறு முத்தி

கணிகொளவே தந்தருளும் கவின தான
கதியறுநான் குத்தீர்த்தம் காணக் கொண்ட
அணிசெந்தூர்க் குகன்றலத்தை அன்பி னெண்ணி
அனுதினமுந் துதிப்பதுவே அடியேன் பூஜை.

கேளுங்கள் நைமிசாரண்ய வாசிகளாகிய சவுனகாதி முனிவர்களே! வியாச பகவானனவர் சுகப்பிரம ரிஷியைநோக்கிச் சொல்லுகின்றார்.

ஓ! சுகா! ஆருதாரத் தரும்பொருளான ஆறுமுகப் பெருமான் செயந்தி புரத்து வந்துசேர்ந்த கதையைச் சொல்லுகின்றேன். பத்தி சிரத்தையொடு கேளென்று கூறுகின்றார்.

இந்தச் சிந்துபுரம் எந்தத் தலங்களுக்கும் சிரம்போல் விளங்குவதாம். இந்தச் சிந்துபுரத்துச் சிறந்துவிளங்கும் தீர்த்தங்கள் எந்தத் தலங்களிலுமுள்ள சிறந்த தீர்த்தங்களை நதிகளைவிட மிகச் சிறந்ததாகும்.

இந்தத்தலத்திலிருந்து தனியாக ஒரு மந்திரத்தைச் செபித்தாலும் கணக்கற்ற மந்திரங்களைப் பிறதலங்களிற் ஜெபித்த பயனைத் தரும். எல்லாவுயிர்களுக்கும் எல்லாப் போகங்களையும் தந்தருளிக் கடைசியில் முத்தி இன்பத்தையுந் தருவதாகும். காசியிற்சென்று கங்கையாடிக்கொல்லாபுரி என்னும் திவ்விய க்ஷேத்திரத்திலிருந்து காசியாசம், குற்றமற்ற ஜெபம் முதலிய பூஜாகாரியங்களை முறையே செய்து

ஆகுதியில் உணவையும் தேவர்களுக்கு உணவு ஆக்கித்தந்து மற்றுந்தேவர் வசிக்குந் திருத்தலங்க ளெல்லாஞ் சென்று பின் ஸ்ரீ சயிலஞ்சென்று வசித்த தெத்தாத்திரேயரும், இவ ரிடத்து அன்புடையவராய் இவர்போல் தவவொழுக்கில் நின்றுவரும் மற்றை ஒப்புரைக்க இல்லாச்சிறந்த பெரியோர் களும், கந்தளேந்திரர், கோரக்கர், கொங்கணர், நாகார்ச்சு னர், மச்சேந்திரர், பீமநாதர், அருணகிரிநாதர், புசங்கர், ஆதிநாதர் முதலிய நவநாத சித்தர்களும் தேவர்களும் முனி வர்களும் மற்றுந் தவவொழுக்கங்களிற் சிறந்தவரும் இயமம், நியமம், பிராணயாமம், சிரவணம், மனனம், நித்தியாசனம், தியானம், சமாதி ஆகிய இவற்றின் நெறிகளைச் செம்மை யாய்த்தெரிந்து சிவபெருமான் பாதத்தைப் பத்தி சிரத்தை யோடு அன்புசெய்து துதித்து அணிமா, மகிமா, லகிமா, கரிமா, ஈசத்துவம், வசித்துவம், பிராத்தி, பிரகாமியம் முத லிய அட்டமாசித்திகளைப்பெற்ற சனகர், சனந்தனர், சனு தனர், சனற்குமாரர், சனச்சுதாதர் முதலிய ஒப்பற்ற முனி வர்களும் எமது சிவபெருமானைப் பணிந்தேத்தி அவர் திருக் குமாரர் கோயில் கொண்டருளி இருக்கும் இத்தலத்தில் என்றும் வாழ்ந்துகொண் டிருக்கின்றார்கள்.

இப்பதி, இப்பதியில் வசிப்போர், விசுவசிப்போர், இதன் புகழைப் பஜிப்போர் ஆகிய எல்லோர் அஞ்ஞானவேரையும் அடியோடு பறித்து அழித்திடும். காமமாதி ஆறு தீக்குணங்

கள் அணுகா; அணுகினுஞ் சூரியனைக்கண்ட பனியேபோல அழிந்தொழியும்.

துன்பத்தை உண்டாக்கும் தன்மையுடையதும் மயக்குந் தன்மையதுமாகிய ஆகாமிய சஞ்சிதக்கட்டுக்களை இப்பதி நீக்கிவிடும். செயந்திபுரம் என ஒருமுறை சொல்லிய அவர்களுக்குச் செல்வம் பெருகும். இனி அவர்களுக்குப் பிறப்பும் இல்லையாகும்.

கங்கையிலும், திரிவேணிசங்கமத்திலும் நீராடிச்செய்த புண்ணியங்களின் பயனெல்லாம் அன்போடு "செயந்தி" என்று ஒருதரஞ் சொன்னதனல் எய்தும் பயனுக்கு பதினறிலொருபங்குக்கும் போதாததாகும். வாசபேயம் என்னும் யாகம் ஓராயிரத்தைச்செய்தவரும் அசுவமேதயாகம் ஒருநூறு செய்தவரும் பெறும்பேறெல்லாம் செயந்திநகர்போய் தரிசிக்க விரும்பினவர்க்கு இலேசாகக் கிடைக்கும்.

இந்நகரத்து இருந்து தருமத்தைத் தினையளவு செய்தாலும் பிறைபோல வளர்ந்து பூரணமாகி விளங்கும். தீவினைகளோ கிருஷ்ணபட்சத்துச்சந்திரன்போல் நாளுளுங் குறைந்து இல்லாதழிந்திடும்.

சங்கிலிகரணம், மாலினிகாணம், பெற்றமகளை இச்சித்த பாவமும், மைந்தன் மனைவியை விரும்பிய பாவமும், பத்திநீயமும், அபத்திநீயமும் ஆகிய அளவில்லாப் பெரும்பாதகங்களுங்கூட இந்தத்திருச்செந்தூர்சென்று குமரக்கடவுளைத்

தரிசித்தமாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோற்போய் ஒழிய புனிதராகி விளங்குவர். தருமம், ஓமம், தானம், நல்ல தமம், சமம், வேள்வி, சற்கருமம், மந்திரம் ஆகிய இவை களைச் செய்தவர்கள் அடையும் பேறு இந்தச் செயந்திபுரத் தில் வசித்தவர் பெறும் பேற்றிற்குக் கோடியிலொன்றுக்கும் பற்றாததாகும் என வேதமேகூறும். பேருண்டி உண்ட பாவமும், பெருங்குடி குடித்தல், குருமனைவியைக்கூடல் முதலிய பாவங்களெல்லாம் செயந்தி நகரத்தில் வசித்தவ ருக்கு அழிந்தோடப் புனிதராவார்கள்.

பௌர்ணிமை, அமாவாசைகளில் திருச்செந்தூர்சென்று கடல் ஆரம்பத்தீர்த்தத்தில் தீர்த்தமாடி ஆறெழுத்து மந்தி ரத்தைச் சிந்தையிற் செபித்துக் குமரக்கடவுளைத் தரிசித் தால் கைலைமலை சேரும் பதமுறுவர். இந்தத் திருச்செந் தூர்தன்னில் உயிர்பிரிந்த மனிதனுனும், விலங்கானும் இங்கிறந்த புண்ணியத்தால் தம்பாவம் நீங்கி வீரவாகு முத லிய குமரக்கடவுள் கணத்தோடு குலவிவாழ்வர்.

வேறிடஞ்செல்ல நினைந்து செல்பவரும் வழிதவறித் திருச்செந்தூர் சேரின் இவர் நினையாது செய்த இப்புண்ணி யப் பயனுல் குமரக்கடவுள் கருணையால் சுக செல்வத்தோடு வாழ்ந்து கடைசியில் குமரக்கடவுள் திருவடி நீழலில் இன் புற்றிருப்பர். இது சத்தியம், சத்தியம். சுகா! நீ யறிக என வேதவியாசர் கூறிப் பின்னுஞ் சொல்லுகிறுர்.

காசி, காஞ்சி, திருச்சிற்றம்பலம், காளத்தி, திருவாரூர், திருவண்ணுமலை, திருச்செந்தூர், திருவானைக்காவல், துவாரகை என்னும் இந்த ஒன்பதுந் திவ்விய திருத்தலங்களாம். இவைகளுள் மூர்த்தி, தீர்த்தம், தலம் என்பவற்றால் எல்லாவற்றினும் மிகச்சிறந்தது செந்திலம் பதியாம். இந்தப்பதியில் வந்து உடல் விட்டவர்கள் குமாரக்கடவுளின் சாருப்பிய பதவியை அடைவர் என்று வேதங்கூறும்.

காசியிற் கயையிற்சென்று பிதிர்களுக்குச் செய்யும் சிரார்த்தத்திலும் இச்செயந்திபுரத்துச் செய்யும் சிரார்த்தம் நூறு மடங்கு சிறந்ததும் பிரீதி தருவதுமாகும். கந்தபுட்கரணியில்பிராடித் தென்புலத்தோர்க்கு உண்பிக்கவேண்டும். இது முடியாத பட்சத்தில் மாவுப்பிண்டமேனுந்தருக. இதுவுங்கூடாதாயின் எள்ளுந் தண்ணீரும் இறைக்க. இதுவுங் கூடாதாயின் பசுவுக்குப் புல்லேனும் போடுக இதனாற் பிதிர்கள் பிரமலோகஞ் சேர்வர். முன்னாலே பிரமலோகஞ் சென்ற பிதுர்கள் முத்தியுலகஞ் சேருவார்கள்.

கந்தபுட் கரணியில் பிண்ட மிடுவோர் குலம் அரிய புத்திரரின்றி இறந்திருந்தாலும் அநாத மாண முற்றிருந்தாலும் தகனஞ்செய்ய அக்கினி இன்றி அழிந்திருந்தாலும் சிந்து தீர்த்தத்துக் கந்தபுட்கரணி தீர்த்தத்தில் மூழ்கி எள்ளும் நீரும் இறைத்து உபவசித்தால் இறந்தோரெல்லாம் இந்திர பதவியை அடைவர்கள் என வேதங் கூறுநிற்கும்.

கந்தபுட் காணி தீர்த்தத்தில் மூழ்கிப் பத்தியோடு குமரக்கடவுளைத் துதித்து ஆறெழுத்து மந்திரத்தைச் செபித்துச் சித்திபெற்றவர்களாகிய தென்புலத்தவர்கள் எல்லாம் நமது பழமையாகிய குலத்தில் உதித்தவர்களில் எவராகிலும் ஒருவர் திருச்செந்தூர் சென்று கந்தபுட்காணி நீராடி எள்ளுந் தண்ணீரும் இறைத்து நமக்கு நீர்க்கடன் செய்தால் நாமெல்லோரும் தேவலோகத்துத் தேவாமிர்தத்தையுண்டு பிரமனும் எதிர்கொண்டழைக்கப் பிரமலோகஞ்சென்று அவன் சபையில் விளங்க இருப்போமே என எண்ணிக்கொண்டிருப்பராம்.

நரகத்திலே கிடந்து துன்பப்படும் மக்களின் முகத்தை எமன் கோபத்தோடு நோக்கி மனங்கனிந்து ஐயோ! இத்தகைய துன்பத்தை யனுபவிக்கப் பாவத்தை மிகுதியாகச் செய்தவர்களே! கந்தபுட்காணி சென்று மூழ்கிக் குமரக்கடவுள் பாதத்தைவணங்கி இன்படையும் தன்மையைப் பெறாத இந்த ஈன உடலை ஏன் எடுத்தீர்கள்? செந்தில் சென்றிருந்தால் இங்கு வந்திருக்கமாட்டீர்களே என்பனும்.

திருச்செந்தூரில் ஆரம்பதீர்த்தத்தில் மூழ்கிக் குளிர்ந்த கந்தபுட்காணியில் ஆடக் குமரக்கடவுளை வணங்க முன்னுள் தவத்தைச் செய்தவர்க்கே கிட்டும்.

சிந்து நகரத்திற் பிறந்தாலும், இறந்தாலும், தரிசித்தாலும், நினைத்தாலும், அதன் திருநாமத்தைச் சொன்னாலும் முத்தி எய்துதல் சத்தியம்.

அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் இந்த ஏழுதலங்களுள் எதிலேனும் பிறந்தாலும், இறந்தாலும், நினைத்தாலும், பெயரைச் சொன்னாலும் முத்தி தரும் என்று வேதங்கள் கூறும். அவைகளும் இத்திருச்செந்தூர்க் குமரக்கடவுளின் அருளாலேயே ஜீவகலை பெற்றிருக்கின்றன எனப்புராணங்கள் கூறுநிற்கின்றன.

எமன், நரகத்திடருறும் மாக்களை நோக்கிச் செந்தில் என்றிருப்பீரேல் இந்தவாதனை உமக்கு வந்திருந்திருக்காதே என்றபோழ்து, "செந்தில்" என்றசொல் அவர்கள் காதிற் புகுந்த புண்ணியத்தால் புனிதராய் நரகத்துயர்தீர்ந்து தேவராவரென்றால் இதன் பெருமையைச் சொல்லலாந்தகைத்தோ என்று சுகருக்கு வியாதர் கூறிப் பின்னுங் கூறுகின்றார்.

கேட்பாயாக சுகா! இப்போழ்து இதுவரை சொல்லி வந்ததால் சிந்துபுரம் எல்லாத்தலங்களிலும் சிறந்தது. இந்த நகரத்துத் தீர்த்தம் எல்லா நகரத்துத் தீர்த்தத்திலும் சிறந்தது. தேவர்களிலெல்லாங் குமரக்கடவுளே சிறந்தவர். இவரே ஜோதிவானவரும் ஆவர் என்று வியாசர் கூறிப் பின்னுங் கூறுகின்றார்.

நூறு பருவகாலம் காசியிற்சென்று கங்கையில் நீராடிய புண்ணியஞ் சிந்துபுரஞ் சென்று ஒருமுறை கந்த புட்காணியில் மூழ்கினால் உண்டாகும். பிறந்த நாள்முதல் இறக்கு நாள்வரை பிரயாகையில் ஸ்நானஞ்செய்த புண்ணியம் சிந்து

நகரில் கந்தபுட்கரணியில் மூன்றுநாள் செய்தவர் பெறுவர். இந்தத் திருச்செந்தூர் என்னும் தலத்தில் இருபத்துநான்கு தீர்த்தங்க ளிருக்கின்றன. இந்த இருபத்துநான்கு தீர்த்தங்களும் காயத்திரியின் உருவாகும். இருபத்து நான்கு எழுத்துக்களும் குமாரக்கடவுள் சந்நிதியில் வேறு வேறு பெயர்களோடு குமாரக்கடவுளருளால் அமைந்தன.

அந்த இருபத்து நான்கு தீர்த்தங்களாவன:—

1. முகாரம்ப தீர்த்தம், 2 தெய்வயானை தீர்த்தம், 3. லட்சுமி தீர்த்தம், 4. சித்தர் தீர்த்தம், 5. அட்டதிக்குப் பாலகர் தீர்த்தம், 6. காயத்திரி தீர்த்தம், 7. சாவித்திரி தீர்த்தம், 8 சரஸ்வதிதீர்த்தம், 9. அயிராவததீர்த்தம், 10. திரிசூலிதீர்த்தம், 11. வள்ளிதீர்த்தம், 12. துர்க்கை தீர்த்தம், 13. ஞான தீர்த்தம், 14 சத்திய தீர்த்தம், 15. தரும தீர்த்தம், 16. முனிதீர்த்தம், 17. தேவர் தீர்த்தம், 18. பவநாச தீர்த்தம், 19. கந்தபுட்கரணி தீர்த்தம், 20. சேது தீர்த்தம், 21. தசகங்கை தீர்த்தம், 22. கந்தமாதன தீர்த்தம், 23. மாதுரு தீர்த்தம், 24. தென்புலத்தார் தீர்த்தம் என்பனவாம்.

இந்த இருபத்து நான்கு தீர்த்தங்களும் தம்முள் மூழ்கினவருக்கு குமரக்கடவுள் பதவியைத் தாக்கூடியன. ஆரம்ப தீர்த்தம் ஆறுமுகக்கடவுள் அருளெலாஞ் சிறந்து நின்றது.

கவுரி, கங்கை, யமுனை, காவிரி, காதோயை, கவுசிகை, சித்தைமுதலியஆறுகளில்ஆடினோர் பெறும் செல்வத்தினும் அதிகச் செல்வமும் பயனுந்தருவது தெய்வயானை தீர்த்தம்.

கன்னியா குமரி, தோகை, வந்தனை, பூதபாவை,வேதம், சுருதி, துங்கபத்திரை, விபாதை, பூவை ஆகிய இந்நதிகளிற் பலகால் மூழ்குங் கதியை லட்சுமி தீர்த்தம் ஒருமுறை மூழ்கினோர்க்கு அருளும்.

வானுவாகினி, விபாதை, வைகை, தேவகி, கண்ணவேணி, கோதை, கண்டகி முதலிய தீர்த்தங்களில் நான் முறைப்படி பலகால் முழுகினவர்கள் பெறும் பயனைக்காட்டிலும் அதிகமாகச் சித்தர் தீர்த்தம் தன்னில் ஒருகால் மூழ்கினவர்க்கு அருளும்.

உவதி, பம்பை, தாமசி, சரயு, கம்பை, துர்க்கை, சுசோபனை இவைகளில் ஸ்நானம் செய்யும் புண்ணியத்தால் வரும் பயனைக் காட்டிலும் பலமடங்கு அதிகமாகத் தேவர் தீர்த்தம் தன்னில் ஒருகால் மூழ்கினவர்களுக்குத் தந்தருளும்.

நர்மதை, தெசானை, நிருவிந்தை, தாபி. கருமநாசினி முதலிய தீர்த்தங்களில் ஆடும பயனெல்லாம் தன்னில் ஒருதரம் முழுகினவர்களுக்குக காயத்திரி தீர்த்தந் தந்தருளும்.

பொன்மயமுகரி, கோதாவிரி, பெண்ணை, வேத்ரவதி இவைகளிற் பலகால் ஆடும்பயனினும் பன்மடங்கு தன்னுள்

ஒருமுறை படிந்தவர்க்கு அருளுந்தன்மையது சாவித்ரி தீர்த்தம்.

விதிசை, வைதரணி, மந்தாகினி, சிலாதலி, வேகவதி, விரேபதி, பலாகை முதலிய நதிகளில் பலகால் ஆடிய பயனெலாம் ஒருகால் தன்னிடத்துப்படியின் சரசுவதி தீர்த்தந் தந்தருளும்.

சந்திரபதாகை, பன்னுசை, உலோகிதை, விபாகை, சிந்து, வாருதை முதலிய நதிகளிற்றுளைந்து பெறும் பயனைத் தன்னில் ஒருதரம் மூழ்கினோர்க்கு அயிராவததீர்த்தந் தந்தருளும்.

சுரசுவதி, சோணை, பொருநை, கம்பாநதி முதலிய நதிகளிற் பலகால் மூழ்கிய பயனைத் தன்னில் ஒருகால் மூழ்கினால் வைரவதீர்த்தந் தந்தருளும்.

காசி, காஞ்சி, மதுரை என்னும் மூன்று தலங்களுஞ் சென்று துதித்தவர் பெறும் ஞானத்தை வள்ளிதீர்த்தத்திற் படிந்தோர் பெறுவர். இம்மைத் துன்பத்தைப் போக்கி மறுமை இன்பத்தையும் முத்தியையும் துர்க்கை தீர்த்தம் தன்னிடம் படிந்தோர்க்கருளும். துதிப்போர்க்கும் நினைப்போர்க்கும் ஞானதீர்த்தம் நற்கதி தந்தருளும். துன்பங்களெல்லாம் நீக்கிப் பண்டைவினைகளையுந் தொலைத்து ஞானம் செல்வம் நிரம்பத்தரும் சத்தியதீர்த்தம்.

மும்மலக் குற்றமும் நீங்கத் தீர்த்தங்கள் பலவற்று ளாடினோர் பெறும் பயனை எல்லாம் தரும தீர்த்தந் தந்தருளும்.

இருவினைத் தொடரைத் தேய்த் தொழிப்பதற்கு அரம் போல விளங்குவது முனிவர் தீர்த்தம்.

சோமசுந்தரக்கடவுள் பாததாமரை சேர்க்கும் சிறப்புத் தரும் தேவர் தீர்த்தம்.

குற்றமற்ற பெரியார் சாபங்களை நீக்கி இன்பந்தருவது பாவநாச தீர்த்தம்.

தீவினைப்பயனைப் போக்கி சஞ்சிதத்தையுங் கட்டோ டழித்துச் சிவபெருமானின் பதத்தைத் தந்தருள்வது கந்த புட்கரணி தீர்த்தம்.

குமரக்கடவுள் திருப்பாதவருளை உள்ளங்கை நெல்லிக் கனிபோற் காட்டியருளும் சேதுதீர்த்தம்.

முத்திக்கு ஆதாரமாயும் தெரிசித்துப் போற்றுவார்க்கு ஜெனனந்தொலைத்து இன்பவமுதாயும் இருப்பது தசகங் கைத் தீர்த்தம்.

மனிதர்க்குப் பரம்பொருளின் பாத தாமரையைத் தந் தருள்வது கந்தமாதன தீர்த்தம்.

தங்குலத்தோர்க்குக் கதி உண்டாம்படி எள்ளும் தண் ணீரும் இறைத்தவர்க்கு எல்லா நன்மையையுந் தருவது மாதுரு தீர்த்தம்.

ஒருதரம் முழுகி உள்ளங்கையில் நீரோடு எள்ளை இறைத்தவர் இருமையிலுஞ் சிறந்திருக்கச் செய்வது, ஈசன் கிருபையையுந் தந்தருள்வது தென்புலத்தார் தீர்த்தம்.

மேற்சொல்லிய இருபத்து நான்கு தீர்த்தங்களையும் பாடினாலும் மூழ்கினாலும் ஏட்டில் எழுதிப் பூசித்தாலும் உண்மைக்கதி உண்டாகும் என்று வியாசபகவான் சுகருக்குக்கூறி யருளினரென்று சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குக் கூறியருளினார்.

---

## எ-வது திருவவதார அத்தியாயம்.

முக்கணார் அருளால் வந்த மொழிசிவ வீரி யம்மாம்
தொக்கசீர் பொறிகள் பூமி தூயதீ காற்றுக் கங்கை
மிக்கமா சரவ ணப்பேர் மிகுதடம் தங்கி யோங்கிக்
கொக்கதாஞ் சூரன் மாயக் குமார னெழுந்த தம்மா.

பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும், சூரன் பன்மன் முதலிய அசுரர்கள் கொடுமையால் தாங்கமுடியாத துன்பமுற்றவர்களாய் வெள்ளியங்கிரியில் வீற்றிருந்தருளும் சிவபெருமானாரிடம் வந்து முறையிட்டுக் குறைதீர்க்க வேண்டுமென்று பாதம் பணிந்தனர். அவர்க்கு அருளுதற்பொருட்டு உமாதேவியார் திருக்கோயிலிற் சென்று அவளொடுதழுவி நெடுங்காலம் இருந்தருளினார்.

முக்கண்மூர்த்தி இந்தவிதமாகச் சத்தியோடு சம்பந்தராய்க் காலமில்லாக் காலத்திற் கூடிய கூட்டத்தால் பூமியிற் பாரம் மிகுந்தது. பூதேவியும் ஆற்ருளாகி அழுங்குகின்ருள். அதுகண்டு நாங்களும் மனங்கசிந்து வருந்துகின்ருேம். தயவுசெய்து நீ சீக்கிரம் நீக்கவேண்டும் என்று வேண்ட இறைவர் உள்ளங்கனிந்து புன்சிரிப்போடு எம் கூட்டத்தை (போகத்தை) நீக்கினேம். முதன்மையான சுக்கிலமாகிய நெருப்புப்பொறி எம்மைவிட்டு நீங்கிவிட்டது. உமையிடம் அதைச் சேர்த்திலம். ஆகையால் அதற்கு இடம் எங்கே அமைக்கின்றீர் என்று கேட்க, தேவர்கள் இறைஞ்சி ஏத்தி தேவரீருக்கு அட்டமாமூர்த்தங்களுண்டு. அதில் பூமிஉருவும் ஒன்ரும். அதனுல், பூமிமேல் வைத்து எம்மைக் காத்தருள வேண்டுமென்று வேண்டினர். அருட்கடலாகிய சிவபெருமானும் அவ்வாறே செய்தார்.

பூமிதேவி அப்பொறிகளைத் தாங்க முடியாதவளாகி பெலம் ஒடுங்கி வெப்பந் தாங்கமாட்டாது துடிதுடித்தாள். உடனே தேவர்கள் அக்கினி தேவனைச் சுமக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அக்கினி தேவனும் அப்பொறிகளைச் சுமந்து வெப்பந்தாங்க முடியாதவனுகி வேர்த்து விதிர் விதிர்த்துப் புலன்கள் நடுங்கி ஐயையோவென்று கதறி வாயு பகவான் சகாயத்தையும் கூட்டிக்கொண்டு கங்கையில் அப் பொறிகளை விட்டான். அவளுங் தாங்கமுடியாதவளாகிப்

பனிமலைக்குப் பக்கத்திலுள்ள பெரிய சரவணப் பொய்கையிற் சேர்த்தாள். அந்தச் சரவணப் பொய்கையில் அட்டமாமூர்த்தி வடிவத்தோடு விளங்கி நீர் அசைவினால் அசைந்து பிரமப்பொருளைப்போல் விளங்கின.

சொல்லற்கரிய அற்புதங்களையெல்லாம் புரிந்து மலைபோலெழுந்த அந்த வீரியம் ஆயிரங்கோடி சூரியர்போலப் பிரகாசித்து ஆறுமுகக் கடவுள் உருவாக எழுந்தது.

சிவபிரான் பூமி, அக்கினி, வாயு, கங்கை, சரவணப் பொய்கை என்ற இவ்வாறிடத்திற் பொறிபொருந்தி எழுந்து மூளைத்தோன்றினதால் கந்தனென்றும் சண்முகனென்றும் பெயரிட்டுக் கார்த்திகை முதலிய நட்சத்திரப் பெண்களை நோக்கி நீங்கள் அஞ்சாது இச்சேய்க்குப் பாலூட்டுங்கள் என்று கட்டளை இட்டனர்.

உமாதேவியார் காற்சிலம்பின் ஒன்பது மணியிலிருந்து நவவீரர்கள் தோன்றினர்.

சரவணப்பொய்கையிற்றோன்றிய முருகப்பெருமான் வீரவாகுமுதலிய வீரரோடுசென்று சூரபன்மாதியரைக்கொன்று வள்ளி தேவயானை என்னும் இருபெண்களைமணந்து தேவர்களைக் கூப்பிட்டுக் கேட்கின்றார். நாம் என்றும் தங்கி இருப்பதற்கு இந்தக்கடல்சூழ்ந்த உலகத்தில்மலையும் ஆறும் லட்சுமி திருநோக்கும் உள்ளதாய்க் கடற்கரைக்கு அருகிலுள்ள ஒருதலம் கூறுங்கள் என்று கேட்க, தேவர்கள்

தொழுது கூறுகின்றார்கள். கடற்கரையோரமாயும் மலைவள முள்ளதாயும் பொருநை நதி கடலிற் கலக்கும் சங்கமத்தை யுடையதாயும் திருமகள் அருள் பூரணமாகப் பெற்றதாயும் இருப்பது செயந்திமா நகரம் என்றுகூறி மேலுங் கூறுகின் றார்கள் என்றுவியாதர் சுகருக்குச் சொல்லியருளினர் என்று சூதர் நைமிசாரண்ய வாசிகளுக்குக்கூறி மேலுங் கூறு கின்றார்.

## எ-வது செயந்திபுர அத்தியாயம்.

கந்தமா தனத்தைப் பொருநையைக் கொண்டு
　　கமலநன் மலர்மிசை மேவும்
செந்திரு வருளும் பூண்டுள செயந்தித்
　　திருநகர் சேந்தனைத் தன்பால்
முந்தவங் குறைய முன்னிய தவத்தால்
　　முகுந்தனும் பிரமனும் போற்றும்
மைந்துள திதனை நினைந்தவர் தாமும்
　　மயிலவ னருள்பெறு மாலோ.

எம் ஆண்டவனாகிய முருகக்கடவுளே நாங்கள் கூறிய செயந்திபுரத்து விளங்குகின்ற கந்தமாதன வெற்பின் அழகையும், பொருநையாற்றின் சிறப்பையும், இந்தச் சிறந்த செயந்திபுரத்தின் வளத்தையுஞ் சொல்லுகின்றோம் கேட் டருள்வீராக என்று கூறுகின்றார்கள். கந்தமானப் பிறங்க

லென்னும் பொதியமலையின் சிறப்புச் சொல்லிமுடியாதது என்றாலும் சொல்லுகின்றோம். ஓ குமாரக்கடவுளே! கேட்டருள்வீராக என்று கூறுகின்றார்கள் தேவர்கள்.

காந்தள், குரவு, கடம்பு, சந்தனமுங் கொண்டு தெய்வத்தன்மை பூண்டிருப்பதாலும், வல்லி தழுவப்பெற்றிருப்பதாலும் முருகக்கடவுளே உன்னை ஒத்தது. குரவு, கொன்றை, கூவிளம், அரவும், திங்களும், நீரும் தரித்து வானும் பூமியும் பரவ இருத்தலாலும், ஐயானன (சிங்கம்) முடைமையாலும், கொடி தழுவலாலும் உன் தந்தையாகிய சிவபெருமானை ஒத்தது.

சாந்தம், நானம், பலவகைப் பணி (பாம்பு ஆபரணம்) யானைத்தந்தங்களும், பலவகை ரத்தினங்களும், அருமை மருந்துகளும் தன்னிடம் பொருந்தி இருப்பதால் ஒரு வணிகனை ஒத்திருக்கிறது.

தூங்கலோசை, செப்பலோசை, துள்ளலோசை கொண்டு காய், கனி, தண்பூ, தேமா, புளிமா, கூவிளம் முதலியன கொண்டிருப்பதால் தமிழ்போன்று விளங்குகின்றது.

இனி இச்செந்தியம்பதியிலுள்ள பொருநையாற்றின் சிறப்புச் சிறிது சொல்லுகின்றோம் கேட்டருளும் எமது ஆறுமுகக் கடவுளே என்று தேவர்கள் கூறுகின்றார்கள்.

தேவரும் வந்து படியவிரும்பும் பொருநைநதியானது தன்னிடத்துள்ள தூய்மையாலும் வாசனைமிக்க மான்மதம்

மததானங்கொண்டு விளங்குதலாலும் முக்கனியவலோடு கடலையுங் கலந்து பெருகவாரிச் சேரலாலும் தந்தங்களைச் சுமந்து ஓடுதலாலும் விநாயகக் கடவுள்போல் விளங்கும்.

வளைந்தசங்கு வெள்ளைச்சந்திரன்போலவும் கொக்கிறகு நுரைமின்னல்போலவும், பலகால்கள் ஜடைபோலவும், சிறந்த தாமரைகள் கபாலம் போலவும் விளங்கலால் தாருகாவனத்துப் பிரமகபாலத்தோடு சென்ற பிட்சாடன மூர்த்திபோல் விளங்கும்.

அரவத்தைத் தன்னிடத்தே கொண்டிருத்தலாலும், வலியதோலைக் கொண்டுவருதலாலும், அம்பரவிடம் பொருந்தலாலும், இருபக்கமும், நால்வேதபாரகர் படிதலாலும், தேவரும் வந்து வணங்குதலாலும், மறை முதல்வராகிய சிவபெருமானை ஒத்துள்ளது. செங்கடம்பை எடுத்தணிதலாலும், குறிஞ்சித்திணையிற் றிரிதலாலும், சங்க முந்துதலாலும், சீரலைக்கரைவாய்ச் சேர்தலாலும், எங்கும் சுரமொழித்தலாலும் முருகவேளே! உன்னைப்போன்றது இந்தப் பொருநைநதி.

சங்கம் ஏந்தியும் சக்கரங்கொண்டும் மாதரைத் தழுவிப் பொன்னோடு புணர்ந்து மருதத்தை யொடித்தலாலும் அகிலம் உண்ணுதலாலும் தேவர்க்கமுதளித்த மால் போன்றது இந்நதி.

பூத்தாங்கலால், அன்னம்மேல் வரலால், கலைநாவலால் பிரமதேவனை நிகர்த்தது.

பலதருக்களும் வெள்ளை வாரணமுங்கொண்டு பல மீன்கள் கண்கள்போல் விளங்கித் தலைமையாகி தேவர்கள் தினம் இறைஞ்சித் துதித்தலால் தேவேந்திரன்போல் விளங்கும் தன்மையது இந்நதி.

ஆசின்மிக்கு (விரைவினுல் மிகுந்து) மென் மதுரமாய்ச் சித்திரத்தளாவி ஓசைபெற்று வித்தாரமாகி ஐந்திணையளாவி காசு (ரத்தினம்) நான்மலர் பிறப்புடன் காட்டி வருதலால் பொதியமுனி நின்பாற் கற்றுவிரித்த தமிழ்போன்று விளங்குகின்றது.

*ஓங்கல் யானை மேற்கொண்டு கால் (காற்று, வாய்க்கால்) கொண்டு முல்லை, அசோகம், நீலம், தாமரை முதலிய மலர்களைத் தாங்கிவருதலால் மன்மதனை ஒத்தது அந்நதி.

இப்படிப்பட்ட பலபெருமையையுடைய பொருநை நதியின் சிறப்பு முற்றும் எம்மாற் கூறுந்தரமுடையதல்ல. இனி செயந்திபுரச் சிறப்புஞ் சிறிது எமக்கெட்டியமட்டிற் சொல்லுகிறோம் என்று கூறுகின்றார்கள்.

இச்செயந்தியம்புரத்தின் மாந்தரெல்லாம் சிவனடியார்க்கும், பாணர்களுக்கும், வாணர்களுக்கும், இரவலர்க்கும்

---

* மலை, மிகுந்த இருள் மன்மதனுக்கு இருள் யானை.

மணி, பொன், உண்டி, உடை முதலியன வெறுக்கவழங்கும் இயல்பு உடையவர்கள்.

இந்த நகரில் தேவார திருவாசகப் பதிகங்கள் படிப் பாரும், படித்தருத்தம் பகர்வாரும் எங்கும் நிறைந்திருப்பர்.

இந்நகரத்துப் பெண்கள் உப்பரிக்கையின் மேலிருந்து பந்தாட புநர்பூச நட்சத்திரத்தையும் ஊடுருவிச் சென்று கற்பகச்சோலையின் தேனை ஒழுகச்செய்யும்.மன்மதனை ஒத்த ஆடவர்கள் போதுபோக்குக்காவிடும் ஆட்டுக்கடாச்சண்டை கடல் ஒலிபோல் முழங்கும்.

ஈரப்பலாக்கள் மேகமும் நட்சத்திரமும் பொருந்திய வானளவு வளர்ந்து காய்க்கும், சூரிய வெப்பத்தைச் சுனை நீர் தணிக்கும். சந்தனவிருக்ஷங்களின் கிளைகள் சூரியனின் ஓட்டத்தைத் தடுக்கும். கன்றை எண்ணிப் பால்சொரியும் மேகக்கூட்டங்களை ஒத்த எருமைக்கொம்பில் ஊர்ந்து சங்கு முத்துக்களைச் சொரிய சந்திரன் கதிர் என குவளைப்பூக்கள் மலரும் வளப்பமுடையது.

வண்டல் விளையாட்டுச் செய்யும் மாதர்கூந்தலை மேகம் என்று எண்ணி மயில்கள் சிறைவிரித்தாடும் வளப்பமுடையது.

வீதியில் மறையோர் ஓதும் வேள்விக்குரிய வேத மந்திர ஓசைகளைக்கேட்டுச் சோலையில் கிளியும் பாடற்பூவையும் பாடி ஒலிக்கக்கேட்ட தேவலோகத்தவர்களும் முனிவர்க

ளும் வேள்வி நடக்கிற தென்றெண்ணிவந்து இமைப்பிலாது காத்துக்கொண்டிருப்பர். புருவங் கோணாமலும் விழி இமைக்காமலும் கண்டம் விக்காமலும் திக்காமலும் இனிமையோடு இந்நகரப் பெண்கள் பாடுதலை தும்புருமுலிய தேவயாழோர்கூட்டங்கள் கேட்டு வியந்து தலையசைப்பார்கள்.

அந்தச் செயந்தி யம்பதியிலுள்ள தெருக்களிலெல்லாம் பழையவேதமுழக்கத்தொனியும், பல சுருதித்தொனியும், கல்யாணமுழ வொலியும், மனுநெறிபயில் ஒலியும், மதயானை பிளிறும் ஒலியும், மயிலனையார் நடமாடும் ஒலியும், கைம்மாறு கருதாது மேகம்போற் கொடுக்கும் ஒலியும், கடலொலியும் அடங்க ஒலிக்கும்.

கொடை முரசும், கல்யாண முரசும், போர்வீரர் வெற்றி முரசும், வேதியர் மகத்தொலி முரசும், கூடிக்கவன் முரசும் இரவும் பகலும் கடல் ஒலியோடு மாறுகொண்டு ஒலிக்கும்.

இத்தகைய வளங்களோடு கூடியது செயந்திநகரம் எனத்தேவர்கள்கூற அயிற்கரங்கொண்ட மயில்வாகனப் பெருமான் கேட்டு மகிழ்ந்து வீரவாகுவை நோக்கி உன் தம்பிமார்களோடு உன் சைனியங்களை அழைத்துக்கொண்டு வா எனக்கூறிட, வீரவாகுவும் அழைத்து வந்தனன். பூதப் படைகளெல்லாம் களிப்பினால் கூத்தாடின. ஆதிசேடனும் பாரந்தாங்கமுடியாது முடி அசைத்து நெளித்தான்.

வாயுதேவனை நோக்கி நீ தேர் செலுத்து என்றுகூற அவனுந் தேர் கொணர்ந்தான். வள்ளிதேவானையோடு சிங்க ஆசனத்தைவிட்டு எழுந்து தேர்ஏறிப் புறப்பட்டார். மன்மதன் அடைப்பை தாங்கினன். வருணன் காளாஞ்சி ஏந்தினன். யமன் வீரவாள் ஏந்தினன். இந்திரன் சாமரை இரட்டினன். சூரிய சந்திரர்கள் குடை பிடித்தார்கள். தும்புருநாரதர் இசைபாடினர். அக்கினிபகவான் தீவர்த்தி தாங்கினன். நிருதி குபேரன் பக்கத்தே ஆலவட்டம் வீசிறி ஏந்திவரத் தேவர்கள் பூமழை சொரிய, பிரமனும் விண்டுவும் தத்தம் அன்னவாகனத்துங் கருடவாகனத்தும் ஏறிப் பக்கத்தேவர, தேவர்களும், முனிவர்களும் துதித்து ஏத்திச் சூழ்ந்து ஆரவாரித்துவர, வேதங்களும் நாரும் பெருமகிழ்வோடு ஆரவாரித்துத் துதித்துப்பரவப் பலவகை வாத்தியங்கள் கோஷிக்கச் சின்னம் ஒதவந்து தேர்விட்டிறங்கி வள்ளிதேவானையோடு செயந்தியம்பதியிற் குதூகலத்தோடு சென்று குடியிருந்தருளி வீற்றிருந்தருள்செய்வாராயின ரென்று வேதவியாசர் சுகருக்குக் கூறினரென்று சூதர்நைமிசாரணிய வாசிகளுக்குக் கூறியருளினர்.

---

## அ-வது வள்ளியம்மையார் திரு அவதார அத்தியாயம்.

---

### அறுசீர் விருத்தம்.

மான்மக ளாக மாலின் வலக்கணின் வந்த கந்தன்
தான்மகிழ் முதன்மைத் தேவி தனிக்கொடி யிடக்கண் வந்த
வேன்முரு கிரண்டாந் தேவி வெள்கிட இகழ்ந்த வாற்றால்
மான்மக ளானு ளன்னுள் மலரடி போற்றி போற்றி.

பூவுலகுக்கே அச்சாணிபோல் விளங்கும் மகாமேரு மலைமேல் ஏமன் என்னும் ஒரு முனிவர் திருமாலை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். இத்தவமகிமை விண்ணுலகெல்லாம் பரவ இந்திரனறிந்து கந்தர்வர்களையும், நாடகமாதர்களையும் நோக்கி "ஏமமுனிவரின்" யோகத்தைக் குலைத்து மோகத்தை மூட்டிவாருங்கள் என்று கட்டளையிட்டு அனுப்பினான். அவர்களும் முனிவர் தவஞ்செய்யுமிடஞ் சென்று தம் ஆடல் பாடற் சாமர்த்தியமெல்லாங் காட்டி மோக மூட்டினர். முனிவரும் தவங்குலைந்து கண்விழித்து நோக்கிச் சினந்து நீங்கள் யார்? என் தவத்தை என் குலைத்தீர்கள் என்று கேட்டுச் சினந்து நீங்கள் கடுமொழி பேசும் வேடர்களாகுக. உங்களோடு வந்த நாடகப் பெண்களும் வேட்டுவப் பெண்களாகக்கடவர் என்று சபித்தனர். அவர்

கள் அஞ்சி முனிவர் பாதத்தில் வீழ்ந்து பிள்ளைகள் குற்றஞ் செய்தால் தந்தை நஞ்சூட்டிக் கொல்வனோ? நாங்கள் அறியாது இந்திரன் ஏவலாற் செய்த பிழையைப் பொறுக்க வேண்டுமென்று வேண்டினார்கள். உடனே முனிவர் முக்காலத்தையும் ஞானதிருஷ்டியாலுணர்ந்து குமரக்கடவுளுக்கு மனைவியராகிய திருமாலின் கண்ணிற்றோன்றிய வள்ளியம்மை தேவானையாரென்னும் இருவருள் வலக்கண்ணிற்றோன்றிய வள்ளியம்மையார் கந்தக்கடவுளுக்கு மிகப் பிரியமுடையவர் ஆக இருந்தமையாலும் முதன் மனைவியாக இருந்தமையாலும் அகங்காரங்கொள்ள, அதனை அறிந்த குமரக்கடவுள் அப்பாவந்தீர உமாதேவியாருக்குச் சேடியாகவிரும்பித் தவஞ்செய்ய மான்வடிவங்கொண்டு மலைச்சாரலில் இருக்கும் காஞ்சனை என்னும் மான்வயிற்றிற் பிறக்கவும், அப்பொழுதுதான் அங்குசென்று மணந்தருளுவதாகவுங் கூறிய மொழிப்படி வள்ளியம்மை உங்கள் குலத்தில் வளர்வள். அப்பொழுது சிவபரஞ்சுடரின் புத்திரராகிய குமரக்கடவுள் வந்து மணந்தருள்புரிவர். அப்பொழுது உங்கள் சாபம் நீங்கும் என்றருள்செய்து முன்போல் தவத்திற்குச் சென்றனர். இந்திரன் கட்டளையால் வந்த கந்தர்வரும், நடனமாதரும் சாபத்தால் வேடரும், வேட்டுவ மாதரும் ஆயினர்.

குமரக்கடவுள் முதன் மனைவியும் மகாவிஷ்ணுவின் வலக்கண்ணில் வந்தவளும் ஆகிய வள்ளியம்மை மலைச்சாரலில்

மான் வடிவமாகஇருந்த தெய்வக்காஞ்சனை வயிற்றிற் கந்தக் கடவுள் முந்தருளியவருளால் வந்து சேர்ந்தாள். கருப் புற்றமானும் வருந்தி அம்மலைப் பக்கத்தேயுள்ள ஒரு சிற்றூருக்கு அருகாமையில் கருவுயிர்க்க வந்து சேர்ந்தது. இதனைக்கண்ட பாங்கேயிருந்தவர் மானின் துன்பத்தைக்கண்டு அதற்கு உதவி செய்யச் சூழ்ந்தார். மானோ பெரிதுங் கஷ்டப்பட்டுச் சர்வலோகங்களையும் ஈன்ற வள்ளியம்மையாகிய தேவியாகிய பொற்கொடியைப்பெற்றுத் தன் இனத்துக்கு மாறான பெண்ணாயிருப்பக் கண்டு அவ்விடம் விட்டகன்றது.

வேடர்கள் அப்பெண்ணை எடுத்துத் தம் தலைவனிடம் தந்தனர். பெண்மானான காஞ்சனை கௌரிக்குத் தவத்தால் சேடியாகப்போய்ச் சேர்ந்தாள். வேடர் தலைவனும் மான் ஈன்ற பெண்ணைத் தன் அருமை மகளாகக்கொண்டு அன்போடு அருமையாக நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்து வந்தான்.

பெரியோர் சொற்படி வள்ளி என்னும் பெயரிட்டு அழைத்து வந்தான். வள்ளியம்மையாரும் பிறைச்சந்திரன் போல் வளர்ந்து கன்னிப்பருவம் அடைந்தாள்.

சர்வலோக நாயகியாகிய வள்ளியம்மையார் வள்ளியம்மை என்னும் பெயரோடு வேடர் மகளாய்த் தினைப்புனத்துச் சிறுமியரோடு விளையாட்டயர்ந்தும் கிளிகடிந்தும் உலா

விய பண்பாலும் அவள் திருவடிபட்ட சிறப்பாலும் புனிதமுற்றது.

இந்த வள்ளியம்மையார் பிறந்த சிறப்பால் வேட்டுவர் குலமுஞ் சிறப்பும் புனிதமும் உற்றது.

குமரக்கடவுளின் முதற்றேவி வேடர் குலத்து மான் மகளாயுதித்துவளர்ந்து சிறப்புற்று இருப்பது கண்ட ஞான மோன முனிவாரும் வந்து துதித்துக் கொண்டாடித் தரிசித்துச்செல்வர்.

---

## கூ-வது வள்ளியம்மையாரிடத்து முருகப்பிரான் சென்றருளிய அத்தியாயம்.

---

அறுசீர் விருத்தம்.

வேடரின் குலத்துப் பெண்ணு விளங்குறு வள்ளி என்னுத்
தேடரு முருவின் வந்த திகழொரு மின்னே முந்தக்
கூடொரு புனத்துச் சென்று குமரவேள் கண்டு நின்று
நீடொரு மனேயாக் கொள்ள நினேந்தன னவன்றுள் போற்றி.

சர்வலோகத்தையும் பெற்று ரட்சிக்கும் அரும்பெருந் தாயானவள் வேடர்குலத்துப் பிள்ளேயாகி வளர்ந்து பேதை பெதும்பை என்னும் பருவங்கள் கடந்து மங்கைப்பருவம் உற்று வள்ளியம்மை என்ன எவரும் அழைக்க விளங்குங் காலத்து எனது அந்த அன்னே மற்றைக்குறப்பெண்களோடு

தினைப்புனத்துக்கிளிகடியச் சென்றிருக்குங்காலையில் எமது ஆண்டவனாகிய ஆறுமுகப்பெருமான் அச்சாரலில் வந்தருளினார்.

வந்தபோழ்து பொன்வஞ்சிக் கொடிபோல, மின்னற் கொடிபோல அங்குலாவும் வள்ளியம்மையாரைக்கண்டு உள்ளம் உருகினார். அழகிய உருவத்தோடு வந்தருளிய குமாரக் கடவுளை வள்ளியம்மையாருங் கண்டு திருவருட் குறிப்பினால் அவரும் மனத்துக் காதல்கொண்டார்.

வள்ளியம்மையாரிடம் முருகக்கடவுள் வந்து ஓ! அழகிய பெண்ணே! நீயார் மகள்? நீ எவ்வூர்? இங்கு என் வந்தாய்? எனக்கேட்க வள்ளியம்மையார், நான் இந்தக் குறிஞ்சி நிலத்துத் தலைவன் மகள், தினைப்புனங் காத்தற்கு என் தோழிகளுடன் வந்தேன் என்றருள் செய்தாள்.

நீயொரு கலியாணமாகாத கன்னி என்றே நினைக்கின்றேனென்று முருகக்கடவுள் கூற வள்ளியம்மையார் ஆம் எனப் பதிலுரைத்தார். அப்பொழுது முருகப்பிரான் நான் உன்னைக் கல்யாணஞ்செய்ய விரும்புகிறேன், உனக்கு என்னைக் கல்யாணஞ்செய்துகொள்ள விருப்பமுண்டா? என்று கேட்டனர். அதற்கு வள்ளியம்மையார் தந்தை தாய் தாரக் கலியாணஞ்செய்துகொள்வதே ஒழுங்காகும். நீர் அவர்கள்பாற்போய்க் கேட்பீரானால் அவர்கள் உம்மைக் கண்டமாத்திரத்தில் மறுக்காது என்னை உமக்குத்தருவர்.

அப்போழ்து என்னை நீர் களிப்போடு கல்யாணஞ் செய்து கொள்ளலாம். எனக்கும் அது பெருமையும் மகிழ்ச்சியுந் தருவதாக இருக்கும் என்று வள்ளியம்மையார் சொல்ல அவ்வாறேசெய்கிறேனென்று முருகக்கடவுள் வள்ளியம்மையாரின் பிதாவைக் கண்டாரென்று வேதவியாசர் சுகருக்குக் கூறியருளினரென்று சூதர் நைமிசாரண்யர்களுக்குக் கூறிப் பின்னுங்கூறுகின்றனர்.

---

## ௧0-வது வள்ளி அம்மையாரின் திருக்கல்யாண அத்தியாயம்.

வள்ளிதனை அண்ணனெனும் மதயானை யுதவியினல்
உள்ளுருக நெடிதோடி உவந்துதழீஇக் கொளக்கொண்டு
விள்ளுமண முங்கொண்ட விறல்வடிவேற் கந்தனடி
தெள்ளுதமிழ் கொண்டுதுதி செய்திடுவேன் தினம்நானே.

ஓ எனது தந்தையே! முருகப்பிரான் குறிஞ்சித்தலைவன்பாற் சென்று வள்ளியம்மையாரைத் தனக்கு மனைவியாகத்தரவேண்டுமென்றுகேட்டுக் கல்யாணஞ்செய்துகொண்ட திருச்சுப சரிதத்தை எளியேன் கடைத்தேற உரைத்தருள வேண்டுமென்று சுகப்பிரமரிஷிகேட்டருள வியாசபகவான் கூறுகின்றார்.

முருகக்கடவுள் திருச்சரிதத்து அன்புவைத்துக் கேட்பவர்கள் மும்மைப்பயன்கள் எல்லாம் முற்றப்பெறுவர், ஆத

லால், நீ பெறற்கரும்பேறெல்லாம் பெறுவாய். கேட்பாயாக என்று வியாதர் கூறுகின்றார்.

வேலைக் கையிற்றாங்கிய குமாரக்கடவுள் வேடர்தலைவன் இருக்குமிடத்திற்குத் தன் உருவத்தை மறைத்துக்கொண்டு மனிதவடிவங்கொண்டு சென்று உன்மகளை எனக்குக் கல்யாணஞ் செய்துகொடு என்று கேட்டனர். குறவர்கோமான் கோபித்து என் குமாரியைக் குமரக்கடவுளுக்கே கொடுப்பதன்றி இந்தக் குவலயத்து யாவருக்குங் கொடேன். அந்த முத்தேவரும் வந்து கேட்டாலும் தரேன். போ! போ! என்று சினந்து உரைத்தான்.

இதுகேட்டு இருசெவி வழியாகவும் அமுது உண்டவர் போல் ஆறுமுகப்பெம்மான் மகிழ்ந்து வள்ளியம்மையாரின் மனம் எவ்வாறு இருக்கிறது காண்போம் என்று எண்ணி வள்ளியம்மையார் இருக்கும் தினைப்புனத்து இந்திரஜாலம் போல ஒரு பெரிய வேங்கைமரமாக நின்றருளினார்.

வள்ளியம்மையாரும் அவர் சேடியர்களும் இவ் வேங்கைமரத்தைக் கண்டு அதிசயித்து மிகச் சுகமான நிழலும் உற்சாகந்தருந் தன்மையுடையதுமாக இருந்ததினால் அந்தத் தருநிழலில் படுத்து இன்புற்று இருந்தனர்.

வள்ளியம்மையாரை மகளாகக்கொண்டு வளர்க்கும் புண்ணியப்பேறை உடைய விற்குறவன் தன் மகளைக் காண

வேண்டி வள்ளியம்மையாரிருக்கும் தினைப்புனம் வந்தான். ஆங்கே முன்னில்லாது புதிதாக ஆகாயம் அளாவ நிற்கின்ற மரத்தைக்கண்டு இது என்ன புதுமையாக இருக்கிறது! இதற்குமுன் இம்மரம் இங்கில்லையே! இப்போது எப்படி இங்கு முளைத்தது? இது மாயையே என்று அதிசயித்துத் தன் கூட்டத்தாரைக் கூப்பிட்டு மரத்தை வெட்டச்சொன்னான். வேடர்கள் வெட்டத்தொடங்குதலும், வேங்கை மரமாக நின்ற வேலாயுதக்கடவுள் மறைந்தருளினார். உடனே வேடன் தன் மகளைக் கூட்டிக்கொண்டு தன் குறிச்சிக்குப் போயினான்.

பின்னொருநாள் வள்ளியம்மை தன் தோழிகளோடு தினைப்புனம் வந்தாள். அப்பொழுது முருகக்கடவுள் வள்ளியின் மேற்கொண்ட காதலால் தன் அண்ணனாகிய விநாயகக் கடவுளை மதயானையாக வந்து அச்சுறுத்தி அந்த வள்ளியம்மையே ஓடிவந்து தன்னை வலிந்து கட்டிக்கொள்ளும்படி செய்யுமாறு செய்ய வேண்டிக்கொள்ள விநாயகக் கடவுளும் பெரும் வேழமாக வள்ளியம்மையாரின் முன்வந்து அச்சுறுத்தித் துரத்த ஆரம்பித்தனர்.

வள்ளியம்மையார் பயந்து ஓடிவரும்பொழுது எதிரே முருகக்கடவுள் தோன்றி நின்றருளினர். உடனே வள்ளியார்சென்று கட்டியணைத்துக்கொள்ள முருகக்கடவுள் மகிழ்ந்து இன்புற்றார். பின் முருகக்கடவுள் தன் அண்ணனை

வேண்டவே மதயானையாக வந்தவர் மறைந்தருளினர். பின் வள்ளியம்மையாரும் முருகரும் உடலும் உணர்வும் ஒன்று கிக்கலந்துகொண்டனர். தேவர்களும் முனிவர்களும் இது அமலன் உலகம் நடைபெற்று இன்புற்று உய்யச்செய் யும் திருவிளையாட்டு என்று கொண்டாடிப் பாராட்டிப் பேசி னர். மலர் மழை சொரிந்தனர். தேவதுந்துபி முழங்கின.

இஃதிப்படியிருக்க சேடியர்கள் ஓடித் தம் அரசனிடம் யானைவந்து தாத்தியதும் குமரவேள் எதிர்வந்ததும் வள்ளி கட்டியணைத்துக் கலந்ததுங்கூற வேட்டிறைவன் தன் குழு வோடு தினைப்புனம் வந்தான். மகளையுங் குமரவேளையுங் கண்டான். மகள் நாணிக்குமரவேளைவிட்டுப் பிரிந்து தந்தை யிடஞ்சென்று வணங்கினள். தந்தையும் மகிழ்ந்து தன் மகளைக்கூடியவன் குமரனே என்றுகுறித்து நோக்கும்போது அக்கடவுளும் மயில்மேல் ஆறுமுகம் பன்னிரு கைகளோடுந் திருவுருவங்காட்டி அருள்செய்யக்கண்ட வேட்டுவ அரசன் மனமகிழ்ந்து போற்றித் துதித்தான். மகளைக் கட்டியணைந்து உச்சிமோந்து ஆசிகூறினன், மகிழ்ந்தான்.

அகவற்பா.

"குன்றிடை யுறையுங் கொற்றவா போற்றி
பொன்றிகழ் கடம்பணி புயத்தனே போற்றி
ஆரண உருவா அறுமுகா போற்றி
வாரண மகளின் மணாளா போற்றி

மாமலை மகள்தரு மைந்தா போற்றி
காமங் கடந்த கதிரே போற்றி
சேம வைவேற் செல்வா போற்றி
பூமகள் மருகா புண்ணியா போற்றி
புராரி பெற்ற புத்திரா போற்றி
தராதலம் போற்றுஞ் சாமி போற்றி
எங்குடி தழைக்க எழுந்தாய் போற்றி
பொங்குமான் மகளைப் புணர்ந்தாய் போற்றி
போற்றி யுன் திருவடி போற்றிச்
சாற்றுவன் பலதுதி சார்ந்துகாத் தருளே''

எனப் பலபல துதிகள் பின்னுங் குறவர்கோன் பன்னிப்பன்னி உரைத்து முன்னின்று எம் ஆண்டவனே எங்கள் குலமுறைப்படி என் மகளை எம் சுற்றத்தார் சூழ இருந்து நாங்கள் கொடுக்க நீர் ஏற்றருளிக் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று வேண்ட முருகக் கடவுளும் அதற்கு இசைந்தனர். குறவர்கோனும் மிக அலங்காரமாக மணவரை சோடித்து முறைப்படி தன் மகளை வாத்தியம் முழங்க தேவர் மலர்மாரி சொரியக் கல்யாணஞ் செய்துகொடுத்தான். பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்களும், அவர்கள் தேவிமார்களும் முனிவர் யோகியர் முதலிய எல்லோரும் வந்துஇருந்து கண்டுகளித்துத் திருமணக் கோலத்தைத் தரிசித்தனர். பின்னர் முருகபிரான் வள்ளியம்மையாரோடு தேரேறிச் செந்தியம்பதி நோக்கிச் சென்றார்.

இது இப்படியிருக்க, தேவயானையார் செந்தியம்பதியில் வேடரும் வேட்டுவ மாதரும் ஏமமுனி சாபம் நீங்கி முன் உருவம் உற்றார்.

இவ்வாறு முருகவேள் வள்ளிகல்யாணத்திற்குவந்திருக்கும்போது தேவயானை சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்யச் சிவபெருமான் சிவலிங்கவடிவமாகிக் காட்சிகொடுத்தருள்செய்ய முருகபிரான் வள்ளியிடம்வைத்துள்ளதுபோலவே தன்னிடம் சமமான காதல்வைக்கும்படி செய்தருளும் வரம்வேண்ட சிவபெருமானும் அவ்வாறு அருள்செய்து அவ்விடத்தே அமர்ந்தருளினார்.

முருகவேளும் வள்ளியம்மையாரும் தேரில் வருவது தெரிந்து தேவயானை எதிர்கொண்டு சென்று வணங்க வள்ளியம்மை வலக்கையையும் முருகபிரான் இடக்கையையும்பற்றி தேவயானையைத் தேரிலேற்றி முருகபிரான் இடப்பாகத்து வைத்துக்கொண்டுசெயந்தியம்புரிக்கோயிலின்வாயிலிற் றேரைவிட்டு இறங்கி உள்ளேசென்று சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியிருக்கக்கண்டு விஷயங்களைத் தேவயானை கூறக் கேட்டு சிவலிங்கப்பெருமானைப் பூசித்துப் பின் கோயிலில் தம் சிம்மாதனத்து இருந்துகொண்டு வள்ளிதேவானை பக்கத்திருக்க ஆறுமுகேசன் சர்வலோகங்களுக்கும் அருள்செய்து வேத வேதியர்கள் தேவர்கள் முனிவர்கள் பரவவிளங்குகின்றார் என்று வியாதர் சுகருக்குக் கூறியருளினாரென்று சூதர் நைமிசாரண்யவாசிகளுக்குக் கூறியருளினார்.

---

## கக-வது பிரம்மாவுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்.

முருகன் வேலால் முன்வந்த மொழிபுட் காணி தன்னேடு
உருகிப் பொதிய மலைபிரமன் ஓங்கு கனக சுந்தரியின்
பெருக முழுகிப் பெரும்பேறு பெற்ற தூய முகாரம்பத்
திருநற் றீர்த்த முஞ்சேர்ந்த செந்தூர் வாழி வாழியவே.

சுகர் வியாதமுனிவர் பாதந்தொழுது பிரம்மதேவன் முருகக்கடவுளை வணங்க அப்பெருமான் அருள்செய்ததைக் கூறியருளவேண்டுமென்று வேண்டினர். அதற்கு வியாசர் கூறுகின்றார்.

முருகக்கடவுள் திரிசுதந்தர மறையோர்களை நோக்கிக் கூறுகின்றார். இந்தச் சிந்துபுரமே மேலான கதி தருவது என்று உறுதியாகக்கொண்டு எமக்குப்பூசனை அருச்சனை முதலியவற்றைச் செய்யுங்கள். நம்மையும், நமதுபூமியையும், கோயிலிலுள்ள பொருள்களையும் சுமந்து காப்பது உங்களுக் குரிமையான கடமையாகும். நீங்கள் இரண்டாயிரவர்கள் ஆவீர்கள். அதில் நாமும் ஒருவனுயிருப்போம். வந்து எம் மைத் தரிசித்து வாழ்த்துகின்றவர்கள் பெறுகின்ற புண்ணி யப்பேறுகளைப் பலன்களை எப்போதும் உங்களை அடைந்த வர்களும் பெறுவார்கள். நாம் எப்போதும் எம்மிரு மனைவி யரோடு இங்கிருப்போம் என்று அருளிச்செய்தனர். ஞான மில்லாதவர்களாயிருந்தாலும் எம்மைச் சிறிதும் நினையாத

வர்களாயிருந்தாலும் கேவலமான பாவங்களைச் செய்தவர்களாயிருந்தாலும் சிந்துபுரம் வந்து சேர்வார்களானால் மேலான நிலைமை தந்தருள்வோம் என்றுங் கூறினர்.

அப்போழ்து அந்தத் திரிசுதந்தரத்தார்கள் முருகேசன் பாதந்தொழுது வணங்கி அவ்வாறே செய்கின்றோம். கடலில் புண்ணிய காலங்களில் முழுக விதித்திருக்கின்றனர். சுத்த ஜலமுடையதும் அமுதம்போல் இனிமையுடையதும் முழுகினர் பாவங்களை எல்லாம் போக்கிப் புனிதமாக்கிப் பேறுதரவல்ல ஒரு தீர்த்தம் ஆக்கித்தர வேண்டுமென்று வேண்டினார்கள். குமரக்கடவுளும் மனமுவந்து தன் கோயிலுக்குத் தெற்கே இருநூறு வில்லிடைத் தூரத்துக்கப்பால் வேலைச் செலுத்தினர். அது அங்கு ஒரு தீர்த்தத்தை யுண்டுபண்ணிக் கங்கைநீர் அதிற்பாதாளத்திருந்து பெருகச்செய்தது. முதன் முதல் அதனில் முருகக்கடவுளே வேத விதிப்படி மூழ்கினர். திரிசுதந்தர வேதியரும் மந்திரமோதி வேதவிதிப்படி மூழ்கினர். அதற்கு கந்தபுட்கரணி என்று பெயருண்டாயிற்று. இத்தீர்த்தந் திரிசுதந்தரர்க்கென்றே குமரக்கடவுளால் உண்டாக்கப்பட்டது.

திரைவதனாரம்பத் தீர்த்தப் பெருமை கூறுகிறேன் கேட்பாயாக. இந்தத் தீர்த்தத்தில் வேதவிதிப்படி முழுகுகின்றவர் மேற்கதிபெறுவர். இதன் வரலாறுவது திருப்பாற் கடலில் ஆதிசேடன்மேற்றுயில்கொள்ளும் நாராயணன்

கோதண்டராமனாக முன்னால் ஒரு பிரம கற்பத்திற் றோன்றினான். அப்போழ்து நம்முன்னால் ஆதிசேது என்று ஒரு அணைகட்டிக் கடலைத்தாண்டிச்சென்று இலங்கை இராவணனைக்கொன்றான். இவ்வாறாக நாரணன் மூன்றவதாரம் எடுத்துவந்து சேது கட்டினமையால் இத்தீர்த்தம் புனிதமுஞ் சிறப்பும் உடையது. இதிலும் நீங்கள் மூழ்கலாம் என்று முருகபிரான் திரிசுதந்தரத்தர்க்குக் கூறியருளினார்.

இன்னும் நாம் வசிக்கும் கந்தமாதன வெற்பின் கதையுங் கூறுவோம் என்று முருகப்பிரான் திரிசுதந்தரத்தர்க்குக் கூறுகின்றார்.

சந்தன மலையானது மகாமேருமலையோடு போர்செய்து உளம்வருந்தி மகாமேரு மலைபோலத்தானும் ஆகவேண்டும் என்று விரும்பி நம்மிடத்துத் தவஞ்செய்தமையால் நாம் சென்று அதனைநோக்கி நீகாற்றால் முச்சிகரங்களையும்இழந்த மகாமேருமலையாக விரும்புகின்றாய். நீ செயந்தியம்பதியில் சிறு மலையாகவந்து நம்மைத்துதி. அப்பொழுது நடக்கும் பிரமகற்பங் கடந்தபின் பின்னாலேவரும் பிரம கற்பத்தில் நீ பொன்மேருவாக விளங்குவாய் என்று அன்போடு கூறியருளினோம். ஆகையால் நம்முடைய சந்நிதியடைந்து தெளிந்த கடலிற்றினமும் மூழ்கி நம்பாதங்களையும் பணிகின்றது. நம்மையும் எப்போதுந் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. கந்தமாதனம் இருக்கு வேதங்கூறி மூழ்கி எம்

மைத்துதித்தலால் இத்தீர்த்தத்துக்குக் கந்தமாதனம்என்று பெயராயிற்று. இதில் மூழ்குவோர் பெறுதற்கரியபெரும் பேறுகள் பெறுவார்கள்.

இன்னுமொருகதையுண்டு. அதனையுந் திரிசுதந்தரத்தர்களே கேளுங்கள் என்று முருகபிரான் கூறியருளுகின்றார்.

முன்னொருகாலத்தில் பிரமன் அகந்தையால் சிவபிரானைப் பழித்தான். சிவபிரான் அவன் அகந்தையை அடக்கியருள வயிரவரை நோக்கி நீ போய் பிரமனின் ஒருதலையைக் கிள்ளிவா என்றருள கபாலத்தைக் கையிலேயுடைய வீரபத்திரக்கடவுள் சென்று பிரமன் ஐந்துதலையில் ஒரு தலையைக் கிள்ளிவிட்டனர். உடனே பிரமன் வருந்தி அலறிக்கொண்டு தன்னை ஈன்ற நாராயணனிடம் முறையிட்டான். அத்திருமால் அற்றதலை முளைக்கவேண்டுமானால் நான் ஆறெழுத்து மந்திரத்தை உனக்கு உபதேசிக்கிறேன். நீ அதனை உபதேசமுறையாகக் கேட்டு உருவேற்றினால் அற்றதலை மற்றும் முளைக்க வழியுண்டாகுமென்று கூறி அவ்வாறெழுத்து மந்திரத்தை உபதேசித்தருளினர். அந்தப் பிரமனும் அவன் உபதேசத்தை உறுதியாகக்கொண்டு நமது ஆறு எழுத்து மந்திரத்தைத் தியானித்துப் போற்றினன். அப்போழ்து நாம் அவனுக்குக் காட்சிதந்து நீ வேண்டுவதென்னெனக் கேட்க பிரமன் விழுந்து வணங்கிப்போற்றித் துதித்துக் கூறுவான்.

அகவற்பா.

"கொந்தார் கூந்தற் கொழுமலை மகளின்
மைந்தா! தாரக மந்திர சொரூபா!
சிந்தா மணியே சிவனுயர் சேயே!
எந்தாய்! அமரர் இடர்தவிர்த் தாயே
ஐந்தலை தன்னுள் அமையொரு தலைதான்
முந்தென தகந்தையான் மொய்ம்பறத் தொலைந்தது
வந்தது பின்னும் வளமுறத்
தந்திடுன் னருளாற் றமியனேன் றனக்கே."

என்று இரந்து வேண்டினன்.

நாமும் பரிந்து இரங்கி அவனுக்கு ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்தருளி உருச்செய்வாயாக உனக்குநன்மையுண்டாம் என்று கூறினோம். அவனும் அவ்வாறே நாலசிரம்யுகம் பணிந்து உருச்செபிக்க சிவபெருமான் தோன்றிப் பிரமனே! யாது குறித்து இத்தவம் புரிந்தனை,வேண்டுவதைக் கேட்டி எனக்கூற பிரமனும் விழுந்து பணிந்து பரவிப் போற்றுவானாயினன்.

நேரிசையாசிரியப்பா.

கந்தனைப் பெற்ற கண்ணுதால் போற்றி
சிந்தனை கடந்த செல்வா போற்றி
முப்புர மெரித்த முதல்வா போற்றி
அப்புறு வேணி அப்பா போற்றி

வெப்புறு காத்து விகிர்தா போற்றி
செப்பொரு நான்மறைச் சிரத்தாய் போற்றி
மூலநோய் தீர்க்கும் முத்தா போற்றி
சீலமா தவத்தினர் தேவே போற்றி
உரைமனங் கடந்த ஒருவா போற்றி
பரையொரு பங்கமர் பரனே போற்றி
எண்ணே போற்றி எழுத்தே போற்றி
மண்ணே போற்றி மதியே போற்றி
நீரே போற்றி நெருப்பே போற்றி
காரே போற்றி கலையே போற்றி
வளியே போற்றி வானே போற்றி
அளியே போற்றி அருளே போற்றி
ஒளியே போற்றி உயிரே போற்றி
வெளியே போற்றி விந்தே போற்றி
இன்பே போற்றி இயலே போற்றி
அன்பே போற்றி அறிவே போற்றி
யானையைப் பெற்ற அண்ணு போற்றி
மானைக் கொண்ட மலர்க்கா போற்றி
அற்ற தலையினும் அடியேன்
பெற்றிட வருள்க பெரியோய் நீயே.

என இரந்து வேண்டினுன்.

சிவபெருமானும் இரங்கிநோக்கி நீ சிந்துபுரத்துக் கடலில் முகாரம்ப தீர்த்தத்தில் தீர்த்தமாடி நமது குமாரக்கடவுளைத் துதிப்பாயானால் நமது சாரூபபதவி உனக்கு எய்தும். அப்பொழுது உனக்கு ஐந்து தலைவரும். நீ உனக்கு ஐந்து தலை உண்டாகும்வரை கடலிற்றீர்த்தமாடி முருகனைவணங்கு. இதனை நாரணனும் மூன்று ராமாவதாரங்களில் வந்துமூழ்கிப் பேறுபெற்றுளான் என்று அருள்செய்தார் என்றுகூறி இன்னும் ஒரு கதைகூறுகிறேன்என்றுகூறுகின்றார் முருகப்பெருமான்.

கலிங்கநாட்டு அரசன் ஒருவன் பெற்ற கனகசுந்தரி என்னும் பெண் பொருநையாற்றின் உற்பத்தித்தானத்திற் சென்று நீராடப்போனாள். போம்வழியில் இருந்த அயக்கிரீபனென்னும் ரிஷியை அவமதித்துச் சிரித்தாள். ரிஷிகோபங்கொண்டு நீவிரைவில் உனக்குவரப்போகிற பிறப்பிற் குதிரைமுகம் பெறுவாய் என்றுசபித்தனர். இது கேட்டுக் கனகசுந்தரி அம்முனிவர் பாதத்தில் விழுந்து பிழைபொறுத்துச் சாபவிமோசனஞ்செய்ய வேண்டுமென்று வேண்டினாள். முனிவரும் இரங்கி நீசெந்திற்பதியில் முருகக்கடவுள் சந்நிதியில் இருக்கும் கடற்றீர்த்தத்தாடினால் நீங்கும்போ என்றருளினார்.

கனகசுந்தரியும் அப்பிறப்பு நீங்கி மறுபிறப்பில் உக்கிரப்பெருவழுதி மகளாய்ப் பிறந்தாள். உடம்பெல்லாம் மிக

வாட்டசாட்டமாய் வடிவாய் அமைந்த அப்பெண்ணிற்கு முகமட்டுங் குதிரை முகமாக இருந்தது. பாண்டியன் துக்கமுற்றான். ஆகாயவாணி உன் மகள் தீர்த்தங்கள் ஆடினால் இம்முகம் மாறிச் செம்முக மாகும் என்றது. பாண்டியனும் திருவருளை வியந்து போற்றி தீர்த்தம் ஆடச்செல்லும் மாதவர்களோடு பரிசன முதலியன சேர்த்துத் தன்மகளையும் அனுப்பினான். அவள் காசி முதல் கன்னியாகுமரி வரையுள்ள தீர்த்தங்கள் எல்லாம் ஆடி நாம் குடியிருக்கும் திருச்செந்தூர் வந்து கடலில் ஆடினவுடனே குதிரைமுகம் மாறி மறுவற்ற மதிமுகம் உண்டாயிற்று. கன்னியும் களிப்பெய்தி மன்னு கோயிற்சென்று என்னைப் பணிந்து போற்றினாள். அரசனுக்கும் ஆள்விட்டுச் சேதி தெரிவித்தாள். அரசன் வந்து கண்டுமகிழ்ந்து எம்மைப் போற்றிப் பூசை விழாக்களெல்லாம் புரிந்து கொண்டாடினான். பிரமன் றலை பெற்றதாலும் கடல் ஆரம்பத்தில் இருப்பதாலும், நமது கோயில் சந்நிதிக்கு முதலில் இருப்பதாலும், இங்கு இப்பெண்ணின் குதிரை முகம் மாறி உண்மை மதிமுகம் உதித்ததாலும் முகாரம்ப தீர்த்தம் எனப் பெயராயிற்று. இன்னும் இதற்கு வாஞ்சா தீர்த்தம், சத்திய தீர்த்தம் என்றும் பெயராகும் என்று கூறிய குமரக்கடவுள் மலர்ப்பதத்தைத் திரிசுதந்தார்

வணங்கி மகிழ்ந்து ஆங்குத் தொழுதிருந்தார்கள் என்று வியாதர் சுகருக்குச் சொன்னாரென்று சூதர் நைமிசாரண்ய வாசிகளுக்குக் கூறியருளினார்.

---

## கஉ-வது திரிசுதந்தரர் வரலாறு உரைத்த அத்தியாயம்.

மறைமொழியின் படிநடந்து மற்றொழுக்கு கனிபூண்டு
நிறையவரும் வேள்விபல நிலத்தியற்றி முத்தேவர்
குறைகழல்கட் கன்பொழுகக் குணங்கொண்டு நடந்தேறி
உறைதிரிசு தந்தரரின் உயர்பெருமை போற்றிடுவாம்.

வியாசமுனிவர் திருவடிகளை வணங்கிச் சூதமுனிவர் திரிசுதந்தரர் வரலாறு கூறியருள வேண்டுமென்று வேண்ட, வியாசர் கூறுகின்றார். குகப்பெருமானும் திரிசுதந்தரத்தரும் ஒப்பென்று சொல்லும்படி சிறப்புவாய்ந்து விளங்கும் திரிசுதந்தரர் பெருமை நான்சொல்லுவதுமுகமனல்ல, உள்ளபடியே கூறுகிறேன் என்று வியாதர் கூறுகின்றார்.

மிக்க அறிவையுடைய தவசிகள் கூட்டம் விரிக்கரிய வேதநான்கையும் மதித்தறிந்த அறிவுவல்லமை யுடையோர் பூமியில் கங்கைக்கரையில் வந்துகூடினர். ஆறுதொழிலையும் செம்மையாகச் செய்வர். வேதங்களாய்ந்து தேவர் முனிவர் தென்புலத்தார் எல்லோரையும் மகிழ்வித்து வந்தனர்.

இத்தகையர் பிர்மா, விஷ்ணு, ருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளையும் பத்திசெய்து தவமுஞற்றி அவர்கள் அருளைப் பூரணமாகப்பெற்று பூமி சுவர்க்கம் சத்தியலோகம் என்னும் மூன்று உலகங்களிலும் சென்று சுதந்தரத்தோடு இருக்க எமக்கு வரந்தருள வேண்டுமென்று அவ்வரத்தைப் பெற்று விளங்கினர். இதனுலேயே இவருக்குத் திரிசுதந்தரர் என்று பெயராயிற்று என்றுகூற சுகர் அவர்கள் எத்தனை பேரென்றுகேட்க வியாதர் கூறுகின்றார்.

விருத்தாசலத்தில் ஆயிரவரும் செயந்தியம்பதியில் இரண்டாயிரவரும் தில்லையில் மூவாயிரவரும் திருவாரூரில் நாலாயிரவரும், திருவண்ணுமலையில் ஐயாயிரவரும், ஜகநாதத்தில் ஆறுயிரவரும், திருவீழிமிழலையில் எழாயிரவரும், கூடலில் எண்ணுயிரவரும், தண்டகவனத்து ஒன்பதிணுயிரவரும், கோகுலத்தில் பதிணுயிரவரும், வதரிகாச்சிரமத்தில் பதினோராயிரவரும், சுவாமி மலையிற் பன்னீராயிரவரும் ஆக எழுபத்தெண்ணுயிரவர். அவ்வத்தலங்களுள் உள்ள குமரக்கடவுளைச் சிவபெருமானை நாரணனை முறையே வணங்கிப்பூசித்து அர்ச்சித்து மறைவேதவொழுக்கங்களிற் குறைவின்றிச் சீலராய்த் திருவருட்கு உரியராய் நடந்து வருகின்றனர். இவரை நினைத்தாலும் பெயரைச்சொன்னுலும் முத்தேவரை நினைத்த சொல்லிய புண்ணியம் எய்தும் என்று வியாசர் சுகருக்குக் கூறியருளினுரென்று சூதர் நைமிசாரண்யர்களுக்குக் கூறியருளினுர்.

## கரு-வது மாதபூசை விதியுரைத்த அத்தியாயம்.

திங்கள்பன்னிரெண்டி னூனஞ் செந்தில்காதன் திருமுன்னர்
தங்குதீர்த்தந்தனின்மூழ்கித்தானமோமஞ்செபஞ்செய்தோர்
பொங்கப்பெறுவர்புகழ்போகம்புண்யமெல்லாங்கூடாதேல்
துங்கநன்னாள்தனின்மூழ்கின் துயரமில்லைச்சுகம்வருமே.

வியாதமுனிவர் சுகரைநோக்கிக் குருபரனின் பாத மலரை நினைந்து ஒவ்வோராண்டின் மாதங்கடோறும் பூஜை செய்யுந் தன்மையையும் திரிசுதந்தரர் செய்கையையுஞ் சொல்லுகின்றார்.

திரிசுதந்தரர் நால்வேதங்களையும் முக்குற்றமும் அறக் கற்றவர். வேதநெறி பிறழாதொழுகுபவர், மெஞ்ஞான முணர்ந்த மேதகையார், வேதம் விதித்த யாகாதிகருமங்களை நியமமாகச் செய்பவர், காமமாதி துர்க்குணங்களெல்லாவற்றையும் அறவே ஒழித்தவர்கள், தாரகாதிபதியாகிய சண்முகப்பெருமானைத் தங்கள் மனக்கோயிலில் நிறுத்தி நிலைநிற்கச் செய்தவர்கள். திரிலோகமும் தரும் இன்பத்திலும் இந்தச் செந்தூர் தரும் இன்பமே இன்பம். அழியா நித்தியப்பேரின்பமென்று இங்கு உறைபவர்கள் ஆதலின் அவரை வந்திப்பவர்கள் சிந்திப்பவர்கள் சீருஞ்சிறப்பும் அடைவார்கள். நிந்திப்பவர்கள் நரகத்துன்பத்து நெடுங்காலங் கிடந்து

துன்புறுவர். இவர்க்குச்செய்யும் பூஜை தானம் அம்முருகக்கடவுட்கே செய்யும் பூஜையும் தானமும் ஆகும்.

ஐப்பசி மாதம் சுக்கிலபட்சத்து நவமி கார்த்திகையில் சுக்கிலபக்கத்து அட்டமியில் வைகாசி மாதத்துச் சுக்கில பட்சத்து மூன்றாந்திதியில் மாசிமாதத்துப் பூர்வபட்சத்து சப்தமியில் ஆக மேற்கூறிய நான்கு மாதங்களின் பக்கங்கள் நான்கிலும் பன்னிரண்டு மாதங்களிலும் பௌர்ணமியிலும் தை மாதத்துச் சுக்கிலபட்சத்து ஏழாவது பதினோராவது திதியிலும் புரட்டாசிமாதத்து கிருஷ்ணபட்சத்து பிரதமையிலிருந்து பூர்வபக்கத்து முன்னாகும் பதினைந்து நாளாகிய மாளையபட்சமாதங்களிலெல்லாம் கிருஷ்ணபட்சத்து பன்னிரண்டு அமாவாசைகளிலும் சங்கிரமப்பொழுதுகள் பன்னிரண்டும் வைதிருதி, விதிபாதம் ஆகிய இருபத்தேழும், மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களின் அமரபட்சத்துச் சப்தமி திதியிலும் நவமியிலும் அனு அட்டகை ஆகிய இவற்றோடு மேற்கூறிய சத்தமி நவமி நடுவேவரும் அட்டமி இந்நான்கு அட்டமியும் மகாஅட்டமி ஆகும். ஆகையால், இந்தத் தொண்ணூற்றாறு தினங்களிலும் மனுவிதிப்படி வழி ஒழுங்காகத்தென்புலத்தார்க்கு ஆகுதி முதலியன வழங்குவார்கள்.

இறுதியிற் சுவாகா என்னும் முடிவுடைய மந்திரமும் இறுதியில் சுதா என்னும் வடிவுடைய மந்திரமும் இறுதியில்

வஷசடு வடிவுடைய மந்திரமும் ஆகிய இம்மேலாகிய மூன்றில் மிகவுயர்ந்தவர்கள் பகலும் இரவும் அனுட்டான விதி தவறாது ஒழுகுவோராகிய தூயவர்கள் ஆகிய இவர்களுக்கும் காக்கைக்கும் உணவு ஊட்டி அதிதிகளோடு இருந்து உணவு உண்போர்கள் விபூதி தேகத்திலணிந்து உருத்திராக்கத்தையும் தேகமெல்லாம் அணிந்துகொள்வோர்கள் இருமுறை மும்முறை பரிசுத்தமாகிய கந்த புட்கரணியில் மூழ்கிப் பூக்களை எடுத்துக் குமாரக்கடவுளை அர்ச்சித்து வணங்கினவர்களையும் தரிசித்தோர்கள் பெருமை எவராலும் எடுத்துரைக்க அரியதாகும்.

மேற்கூறிய திரிசுதந்தரர் முதலிய இவர்கட்கெல்லாம் நன்மை செய்தவர் மேன்மை எய்துவர். தீமை செய்தவர் தீமை எய்துவர் என்று வேதங்கள் கூறும்.

ஆகையால் பரகதி அடையவேண்டியவர்கள் தானஞ் செய்ய விரும்பினுல் இந்தத் திரிசுதந்தரர்க்கும் மற்றப் பெரியார்களுக்குஞ் செய்யவேண்டும்.

கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நட்சத்திரத்திலே முகாரம்ப தீர்த்தத்தில் மூழ்கி குமாரக்கடவுளைப் பூசிப்பவர்கள் பூலோக அரசராக வாழ்ந்து இம்மை மறுமை இன்பங்களைப் பெற்றுக் கடைசியில் குமாரக்கடவுள் திருவடி நீழலிற் கலந்து பேரின்பமுற்றிருப்பார்கள். பன்னிரண்டு மாதங்களிலும் சந்நிதி தீர்த்தத்தில் மூழ்கிக் குமரன் திருவடியைப்

பூசித்தோர் பெறும்பேறு வாய்விட்டுச் சொல்லுந் தரத்த தல்ல.

மாசிமாதத்தில் முகாரம்பதீர்த்தத்தில் ஒருநாள் இரண்டு நாள் மூன்றுநாள் மூழ்கி முருகக்கடவுள் பாததாமரையைத் தரிசிப்போர் ஜனனக்கடலைக் கடந்து முத்திக்கரை ஏறுவர். சித்திரை மாதத்து முப்பது தினங்களிலும் முகாரம்ப தீர்த் தத்து நீராடிக் குமரக்கடவுள் பாதத்தைத் தரிசிப்போர் முத் தராகுவர்.

மாசிமாதத்து நாட்களில் கந்தபுட்கரணியில் முழுகிக் கந்தக்கடவுளைத் தரிசித்தோர்க்கு அந்தக்கந்தக்கடவுள்மாட் சிமையுடைய தன் தரிசனம் தந்து அவர் பாவங்களைப்போக் கிப் புண்ணியராக்கி இன்பம் ஊட்டுவார்.

சித்திரை ஐப்பசி மாதக்காலங்களிலும் உத்தாதட்சணு யன காலங்களிலும் தீர்த்தமாடிக் கந்தக்கடவுளைத் துதிப்ப வர் தினமும் வாசபேயத்தைச் செய்தவர் எய்தும் பயனை அடைவர்.

சங்கிராந்திதோறும் வதனாரம்ப தீர்த்தத்தில் நீராடிக் கந்தபுட்கரணியிலும்நீராடி சிறுபயறு கலந்த செந்நெலரிசிச் சோற்றைக் கந்தக்கடவுளுக்கு நிவேதித்தோர்கள் அருமை யாகிய நூறுமகம் செய்தவர்கள் எய்தும் பயனை அடை வார்கள்.

ஆடி மாதத்து முப்பது தினங்களிலும் முருகக்கடவுளுக்கு பசுந்தயிர் கலந்தசோறு கந்தக்கடவுளுக்கு நிவேதித்தவர்கள் முருகக்கடவுள் அடிமலாடைவர்.

ஆவணிமாதம் ஆறுமுகப்பெருமானை அரிய வேதத்தோடு போற்றித்துதிப்போர் நூறுயாகம்செய்தவர் பெறும் பேற்றைப்பெறுவர். இது நிச்சயம்.

புரட்டாசி மாதத்தில் மாளைய சிரார்த்தம் சிங்கார வடிவேற்குமரர் இருக்கும் செயந்தியம்புரத்து இருந்து செய்பவரின் பிதிர்கள் சத்தியலோகஞ் சேர்வர். இது சத்தியம். ஐப்பசி மாதத்தில் கந்த புட்காணியில் மூழ்கி குமரனைப் பூசிப்போர்க்குப் பிறப்பு பின்வராதென்று வேதங்கள் கூறுகின்றன. மார்கழி மாதத்தில் செந்தூர்க் குமரக்கடவுளுக்கு தயிர்ச்சோறு நிவேதித்தவர்களும் அவன்பாதஞ் சொல்லித் துதித்தவரும் நாரணன் பதத்தைச் சார்ந்து நல்லராய் வாழ்வார்.

தைமாதம் முப்பதும் செந்திற்குமாவேள் ஆலயஞ் சென்று அகிற்றூபமிட்டு அவனை வணங்குவோர் தம் கூட்டமோடு சிவலோகத்து இன்புற்று இருப்பர்.

செந்தூர்க் குமரக்கடவுள் திருவிழாவை நடத்துஞ் சீரியர் ஆயிரம் பிறப்பில் போரசராகப் பெரும்போகம் அனுபவித்துக் கடைசியில் குமரன் திருவடி கூடிக் குலவ வாழ்ந்திருப்பர்.

கார்த்திகை மாதம் முப்பதும் குமாரக்கடவுள் ஆலயத் திற்குப் பசுநெய்யால் தீபமிட்டோர்கள் உலக இன்பங்களை எல்லாம் நெடுநாள் இன்புற அனுபவித்துக் கடைசியில் முருகக்கடவுள் சரணஞ் சேருவர்.

கார்த்திகை நட்சத்திரத்திற் கந்தக்கடவுள் திருமுகச் சோதி மண்டலத்தைப் பாராதவர்கள் கொடிய நரகில் கிடப் போராவர்.

கார்த்திகை தினத்தில் நெல்லி இலையால் கந்தக்கடவுளை அர்ச்சித்துப் பூசித்தோர் எல்லாரும் ஒவ்வோர் இலைக்கு ஒவ்வோர் மகஞ்செய்த பலனை அடைவர் என்றுவேதங்கள்கூறும் என வேதவியாசர் கூறிச் சுகரைக் களிப்பூட்டினரென்று சூதர் நைமிசாரண்யர்க்குக் கூறினர்.

---

## கச-வது விபூதி அத்தியாயம்.

அணுமுதல அண்டம் எல்லாம் ஆறுமுகன் தானே யாகும்
உணுமுறையால் வனப்பு நாற்றம் ஒளிமேன்மை உடைய எல்லாம்
கணுமிகுநற் கருப்பு வில்லான் கவின்பெரிய அத்தா னென
எணுமுருக வேளே என்ன இயம்புதிறம் போற்று வோமே.

சுகப்பிரம்மத்தைப் பார்த்து வேதவியாசர் கூறுகின் றார். எமது செந்திலாண்டவன் எல்லாம் ஆன விபூதிச்சிறப்புக் கூறுகின்றேம் கேட்பாயாக.

சூரனைவென்று வள்ளிதேவானை இருமருங்கமையச் செந்தில் நகர்ப்பொற்சிகரக் கோயிலில் கொலுமண்டபத்தில் தேவர் சூழ எழுந்தருளி இருந்து அருள் செய்திருக்கும் போழ்து அவர் கொலு வீற்றிருந்தருளும் மண்டபத்தில் வீரவாகுவந்து எமது குமரக்கடவுளை வணங்கி அருகிருக்குங் கால் வீரவாகு சண்முகநாதன் சரணம்பணிந்து எமது ஆண்டவனே! மாலும் பிரமனும் தொழுதேத்துஞ் சிவபெருமானும் குருவென வணங்கும் பெருமைபெற்ற ஞானவாரியே! நான் மறைகளாலுங் காணரிய பெருஞ்சுடரே! வேற்காக்கடவுளே! நினது திருவடிவம் எங்குமாக யான்கண்டு பூசிக்க விரும்புகிறேன் என்றான். அப்போழ்து முருகக்கடவுள் கூறுகின்றார்.

சுருக்கமாக நமது விபூதி கூறுகின்றோம் கேள். பின் உனக்கு எங்கும் எல்லாமாய் இருக்கும் நம் நிலை தோன்றும் என்று திருவாய்மலர்ந் தருளுகின்றார்.

அழகிய இடம் அகன்ற பூலோகமுதல் எல்லா அண்டங்களுமாக விளங்குவது நானே. அதனோடு மூத்தொழிலின் கருமங்கள் நான், அவைகளிற் சிருட்டித்தொழிலைச் செய்யும் பிரமனும் நான், உலகங்களிற் சுவர்க்கம் நான், நவகண்டங்களில் உயர்ந்த பரதகண்டம் நான், மலைகளிற் சிறந்த மகமேரு நான், தேவர்களில் இந்திரன் நான், அறிவாளிகளுள் வியாழன் நான், தேர்வல்லவர்களில் மாதலி நான்,

தேர்களிற் புட்பகத்தேர் நான், தேவமாதர்களில் உருப்பசி நான், கானவித்தையர்களில் சிறந்த கந்தருவர் யான், உலகங்களிற் சிறந்த சிவலோகம் நான், கலைகளிற் சிறந்த வேதம் நான், வேதச்சுரம் நான்கில் அரும்பிரச வோசை நான், எழுத்துக்களிற் பிரணவம் நான், ரிஷிகளில் அகத்தியன் நான், யோகிகளில் தெத்தாத்திரயன் யான், சிவன்பாதம் விருப்புடைய பத்தரில் திருப்பாற்கடல் துயிலும் முகுந்தன் நான், புண்ணியபுரிகளில் காசி நான், ஏழுமலைகளில் இமயமலை நான், எண்ணுதற்கரிய சிருஷ்டிகளில் இரணிய கற்பத்தன் நான், தண்ணளியாற் காப்பதனல் மகாவிஷ்ணுவும் நானே, சங்காரத்தொழிலில் காலத்தீக்கடவுள் நான், வலியசெயலால் பேர்பெற்றவர்களில் காலன்நான், குருவடிவில் தட்சுணாமூர்த்தி நான், சொல்லுதற்கரிய தெய்வமாதர்களில் பார்வதி, லட்சுமி, சரஸ்வதியாகிய இவர்களெல்லாம் யானே, மாதங்களில் ஆவணிமாதம் நான், வேதியர்களில் வசிட்டன்நான், கடவுள் ரிஷிகளில் நாரதன் நான், பூமியைத்தாங்கும் எட்டுயானைகளில் சாருவபௌம வேழம்யான், பசுக்களில் சுரபி (காமதேனு) நான், பரியில் ஏழுநாமப்பெரும்பரிநான், மிருகங்களிற் சிங்கம்நான், பறவைகளில்மிக்க வலியுடைய சரபப்பட்சி நான், ருத்திரர்களிற் சிறந்த சங்கரனும் நான், பாதாளலோகத்திலுள்ள சர்ப்பங்களில் ஆதிசேடன் நான், அழகிய ஓடைகளில் மானதப்பூம்பொய்கை நான், மந்திரங்களில் காயத்திரி மந்திரம்

நான், மரங்களில் அரசமரம் நான், உலகத்து உயிர்கொண்டு போகும் வலியவர்களில் இயமனும் நான், சுசிசெய்பவர்களில் ஆண்தன்மையிற் சிறந்த வாயுநான், வலிமையுடைய வானரத்தில் அனுமன் நான், போரிற் சிறந்த சிலைவலியுடைய ராமன் நான், மனச்சூரர்களில் கார்த்த வீரியன் நான், அறநெறியிற் சத்தியம் நான், மகங்களில் அஸ்வமேதயாகம் யான், கற்புடைய மாதர்களில் பார்வதி நான், மேலான பொருள்களில் தங்கம் நான், வந்திக்கத்தகுந்த பெண்களில் தாய் நான், சிறந்த தானங்களில் அபயதானம் யான், யதுகுலத்திற்குக் கண்ணன்யான், வாக்குப்பிறழாதவர்களில் அரிச்சந்திரன் நான், நதிகளில் தசகங்கை நான், சமுத்திரங்களில் திருப்பாற் கடல் நான், தாரகைக் கூட்டங்களில் சந்திரன் நான், இருதுக்கள் ஆறில்வசந்தருது நான், பெண்களை மயக்கும் ஆடவர்களில் மன்மதன் யான், பெரிய தவத்தில் பிராணாயாமத்தியன் யான், கடலிற்றோன்று நவரத்தினங்களில் வெண்முத்து யான், ஆடைகளில் பீதாம்பரம் யான், பிதிர்களில் அரியமா என்பவன் யான், நால் வருணங்களில் அந்தணன் யான், ஆசிரமங்கள் நான்கில் சந்யாசம் நான், வனங்களில் சயித்திர தத்தண்வனம் யான், கதிர்களில் சூரியன் யான், வித்தைகளில் மெய்ஞ்ஞானவித்தை நான், இந்திரியங் கட்கு ஏதுவாகிய இதயம்நான், மன்னர்களில் புருகுச்சன் நான், வணிகர்களில் அளகாபதியன் யான், தீர்த்தங்களில் மணிகர்ணிகை நான், பிரகாசம் பொருந்திய உயர்ச்சிப்

பொருள்களில் கணக்கற்ற மலைகள் நான், பாவநாசனத்திற் சேது நான், தயவில் தாய் நான், சூரிய குலத்தோரில் வீரமுள்ள ராமன் நான், சந்திர குலத்தவர்களில் தருமன் நான், தண்டனையில் இயம தண்டத்தன்மை நான், அவத்தைகளில் யௌவனம் நான், பூசைகளில் மானதபூசை நான், படத்தை உடைய சர்ப்பங்களில் வாசுகி நான், சுவையாறில் உப்புநான், செந்தீக்களில் குற்றமற்ற சாடாரத்தி நான், முதிய காவியங்களில் ராமாயணம் நான், தர்ம சரித்திரங்களில் மனுசாத்திரம் நான், ஞான கதைகளில் கீதை நான், கவிகளில் வியாதன் நான், இன்னுங் கண்ணுக்கு அலங்காரமான பொருள்கள் எல்லாம் உலகத்து யானே. ஆகையால் இவைகளை எல்லாம் நான் என்பதாக அறிந்து பத்திசெயின் உனக்குப் புத்திசத்தி முத்தி எல்லாம் சித்திக்கும் என்று திருமுருகபிரான் வீரவாகுக்கு அருளிச் செய்தாரென்று வியாதர் சுகருக்குக்கூறினரென்று சூதர் நைமிசாரண்யவாசிகளுக்கு அருளிச் செய்தார்.

---

## கரு-வது விசுவரூப அத்தியாயம்.

காண்பனவுங் கேட்பனவும் காத லோடு
கருதுபவும் கருத்துக்குங் காணு தான
எண்பலப்பல் கோடியென இயம்பு மெல்லாம்
இயன்மணத்தில் எணும்வணத்தில் ஏற்ற ஜோதி

சேண்டிகழும் சீர்த்திதனிற் சிறந்து தோன்றும்
  திருநிலத்துப் பொருளெல்லாம் தெரியும் நுட்ப
வேண்டணுவண் டங்களெலாம் வேலன் விஸ்வ
  விளங்குருவிற் காண்வீரன் மென்சீர் வாழி.

எமது தந்தையே! தாயுந்தந்தையும் இல்லாளுகிய சிவ பெருமான்றந்த குருபரனே! உன் விபூதித்துவங் கூறக் கேட்டு அளவிலா ஆனந்தமும் பேறும் பெற்றேன். உன் திருவுருவத்து விஸ்வத்தன்மையுங் கடையேன் கடைத் தேறக் காட்டியருள வேண்டுமென்று வீரவாகு வேண்ட முருகக்கடவுள் கனிந்த உள்ளத்தோடு வீரவாகுவை நோக்கி ரிஷிகட்கும், தேவர்கட்கும், நூல்கட்கும், வேதங்கட்கும், மெய்த்தொண்டர்கட்கும் காண்பதற்கு அரியதும், காண் பதற்குங் கருதுதற்கும் மிக அற்புதமாக இருப்பதும், ஊன் கண்களுக்கு உட்படாததும் ஆனது ஆகையால், உன்னுல் காணமுடியாது என்றாலும் நாம் உனக்கு ஞானக்கண் தருகி ரேம், காணுதி என்று ஞானக்கண்ணையும் ஈந்து விஸ்வரூப த்தையுங் காட்டியருளினுர். பேரண்டங்களெல்லாமும் மற் றுள அண்டங்களெல்லாமும் உன்னும தோற்றமும் தேவர் களும் முனிவர்களும் பன்னும் நான்மறைப் பயனுமாய் நின் றருளினுர் முருகபிரான்.

கருணைநிறைந்த முருகக்கடவுளின் விஸ்வரூபத்தினைக் கண்ட வீரபத்திரர் உச்சிமேற் கைகுவித்துக்கொண்டு துதிக்

றின்றார். பெருமானே! உன் திருவடியிலே கணக்கற்ற தேவர்களும், பத்துப் பிரமரும், பன்னிரு சூரியரும், பதினொரு உருத்திரர்களுங் கவினக்கண்டேன்.

எட்டுப் பெருமலைகளையும் மகாமேரு மலையையும் கோடிக்கணக்கான தெய்வ நதிகளையும் கைலைமலையையும் அக்கைலைமலையின் நடராஜாவின் நடனமுங்கண்டேன். திருப்பாற்கடலையும் அதில் ஆதிசேஷன்மேல் துயிலும் நாரணனையும் கண்டேன். அந்த நாரணன் உந்தியில் தாமரையில் தோன்றிய பிரமனையுங் கண்டேன். யோகியர்களிற் சிறந்த கபிலனையும், மற்றைப்பெரிய மாதவர்களையும், வசிட்டர் முதலிய ரிஷிகளையும் எளியேன் கண்டேன். மனுவிற் சிறந்த அரசர்களையும், நவகண்டங்களையும், ஆங்குள்ள சோலைகளையும், அங்குநின்று யுத்தம் புரியும் வீரர்களையும் பதினான்கு புவனங்களையும் கண்டேன். கோடி சூரியர்களையும் உன் திருமேனியிற் கண்டேன். கணக்கிட முடியாத அழகிய பொருள்களையும் அனேககோடி பிரகாசக் கிரணங்களையும் கண்டேன். அண்டகோடிகளெல்லாம் ஆண்டவனே உன் திருமேனியின் ரோமத்திற்கோத்த மணிகள்போலத் தொங்கிக்கொண்டிருக்கக் கண்டேன். உன் கமலமுகமும் கோரமாகக் கண்டேன். உன் இனிய ஓசையில் பேரிடியோசையுங் கேட்டேன். சூலம், வாள், தண்டு, வில், தோமரம், வேல், எழு, சக்கரம் முதலிய ஆயுதகோடிகளெல்லாம் நின் திருக்கரங்களிற் கண்டேன். பற்றற்ற ஆதி ஈறு

நடுவென்பதில்லா மூர்த்தியே! கணக்கற்ற திருமுகங்களை உடையவனே! அளவில்லாக் காதை உடையவனே! அளவில்லா நாசியை உடையவனே! அளவில்லாத கண்களை உடையவனே! அளவில்லாக் கரங்களை உடையவனே! அளவில்லாத் திருவடிகளை உடையவனே! உன் திருமகிமை கணக்கற்ற பெருமையை உடைய வேதங்களாலும் காணரிதே. செப்புதற்கரிய அழகிய முகதாமரைகள் ஒவ்வொன்றிலுமிருந்து ஆணை செயப்படும்போழ்து எழும் அக்கினியால் பேரண்டங்களெல்லாம் நீறுகின்றன. வாயினின்றும் வரும் தொனியினால் நாயேன் அஞ்சினேன்! அஞ்சினேன்! கோரமோங்கிய இக்கோலங் கொண்டதால் சிறியேன் பார்க்க அஞ்சுகின்றேன். நீ யார் சொல்லென வீரவாகுக்கு முருகக்கடவுள் மொழிந்தருளுகின்றார். ஐந்தொழிற்கும் உரிய மூன்றுபேரும் ஒரு வடிவங்கொண்டதாகியது இவ்வடிவம். கடவுள் மதிப்பார்ந்தவர்கள் சிந்தையைக் கடந்த சின்மயானந்தரூபம். இதன் செயலெல்லாம் நீ யுணர்தற்கரிது. அண்டகோடிகளெல்லாம் இந்தவிதஞ் செய்வோம் என்று முருகக்கடவுள் சொல்ல, வீரவாகு திருவடியில் வீழ்ந்து வணங்கிக் கூறுகின்றார்.

கின்னரர்கள் இயக்கர்கள்பாட அரம்பையர்கள் சூழ்ந்து ஆட முனிவர்சித்தர் மற்றையர்தொழுதுநிற்க தேவேந்திரன் உள்ளம் நடுங்கி நிற்கக்கண்டேன்.போற்றி.உன்கோலம்பார்க்

கவும் அச்சமாக இருக்கின்றது. துதிக்கவும்நா வுள்வாங்குகின்றது. தியானத்தாலே மதிக்கவும் நெஞ்சம் ஏங்குகின்றது. சத்தியமாய்ச் சஞ்சலமாகவே இருக்கின்றது. ஆறுகுணமும் விளங்கத்தோன்றிய விஸ்வரூபனே! உன் சரணம்போற்றி. அடியேன் உள்ளத்துத்தோன்றும் விசுவரூபத்தைச் சுருக்கி உன்பண்டைய அழகிய வடிவங்காட்டியருளவேண்டுமென்று வேண்ட பன்னிருகோடி சூரியர்கள்போற் பிரகாசிக்கும் ஆறுதிருமுகத்தோடு அழகிய திருமேனியோடுதோன்ற நின்று தாளில்வீழ்ந்து வணங்கும் வீரவாகுவைக் கைகளால் எடுத்துக்கூறுகின்றார்.

நீ அஞ்சவேண்டாம். நான் ஒன்று சொல்லுகிறேன் கேள். பிரமரும் சனகராதியோரும் நந்தியும் பிருங்கியாதி முனிவர்களும் மனதை அடக்கி நோற்று இந்த விஸ்வரூபத்தைக் காண முயன்றார்கள். அவர்களை நோக்கி இந்த இனிய ரூபத்தை ஆதியுகத்தில் சூரரைக்கொன்று கந்தமாதனப் பொற்கோயிலில் வீற்றிருக்கும்போது எமது சேனை வீரனாகிய வீ ர வா கு க் கு க் காட்டியருள்வோம். அப்பொழுது நீங்களுங்கண்டுய்யுங்கள் என்று கூறினோம். அதேவிதமாக இப்பொழுது உனக்கு இவ்விஸ்வரூபங்காட்டினோம். நீயுங்கண்டு உவந்து மகிழ்ந்து பயனுற்றாய்; இதனால் முப்புவனத்தும் முதன்மைப்பேறுற்றாய்; ஆதலினால் ஆறெழுத்தை மனத்து அற்புதமுறப்பதித்து வேத முறைப்படி

தியானஞ்செய்து நமது பேரைச் சொல்லுக. நம் தாளை யடைந்தோரைக் காத்து அவர் வேண்டும் அவாவை பூர்த்தி செய்திடுக. அப்பால் பிரமகர்ப்பத்தின் முடிவில் நமது பாதத்தைச் சார்க என்று அருள்செய்தான். வீரவாகுவும் மனங்கொண்டேத்தி அற்புத ஆனந்தமுற்றிருந்தான்.

இத்தகையசீரிய சரிதையைக் கேட்டோர் படித்தோர் எழுதினோர் பூசித்தோர் பெறலரும் பேறெல்லாம் பெற்று முருகனுக்கருகாகி வாழ்வர். வஞ்சனை, பில்லி, சூனியம், நோய், அவமிருத்தியு முதலியனஅண்டா என்று குகப்பெருமான் திருவருளும் புரிந்துளாரென்று வியாதர் சூதருக்கருளினரென்று சூதர்நைமிசாரண்யவாசிகளுக்குக் கூறியருளினார்.

---

## கசுஉ-வது சாமிநாதன் மந்திரமகிமையுரைத்த அத்தியாயம்.

சாமி நாதன் ஆங்கடவுள் தாலங் கூறுஞ் சிவன்மாவே
தாமின் பாகத் தாணிக்கு தயவா வந்த தனிக்கோலம்
நேமி சுமந்த மான்முன்னாள் நினைந்து வந்த யாழ்முனிக்குக்
காமித் துரைத்தான் கவினுறவே கண்டார் கேட்டார் வாழியவே.

மூலமலம் முதலாய எல்லா மலங்களையும் வேரோடுகளையும் சிறப்புடையதான குமரேசப் பெருமானின் விஸ்வரூபக் காட்சியை வீரவாகுதேவர் கண்டுகளிக்குங்காலத்துக் குமரே

சன் திருவருள்பெற்ற தேவருட் சிலரும் முனிவருங்கண்டு களித்தனர். அவர்களுள் நாரதமுனிவர் முதலிய முனிவர்களும் தேவர்களும் திருப்பாற் கடலில் துயில்கொள்ளும் மாமாயனிடஞ்சென்று பணிந்து போற்றினர். திருநெடுமால், வந்த நாரதமுனி முதலியவர்களுக்குக் கருணைசெய்து, நாரதரை நோக்கி வந்தகாரியம் ஏதேனும் உண்டோ என்று கேட்க நாரதர் திருநாரணை நோக்கிக் கூறுகிறார்.

தென்றமிழ்ப் பாண்டிநாட்டில் மாவாய்நின்ற சூரை இருகூறுகவேல்விட்ட முருகேசப்பெருமான் வள்ளிதேவானைதழுவக் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் செயந்தியம்பதியில் வீரவாகுதேவருக்காக ஆனந்த விசுவரூபங்காட்டியருளியகாலத்து முனிவர் கந்தருவர் தேவர் திரிசுதந்தரர்களோடு இருந்து எழுந்த அந்தத் திருவுருவத்தைக் கண்டேன். அதிற்கண்ட ஆனந்த வியப்பை அச்சுதா! உன் சமுகத்து அறைதற்காகவே ஈண்டுவந்து உன்றிருவடி தொழுதேன். கேட்டருள்வீராக பகவானே! பாரதப்போரிலே தனஞ்சயனுக்காக நீ பெற்றிருந்த விஸ்வரூப வடிவும் கண்டிருக்கிறேன். அர்ச்சுனனுக்குச் சிவபெருமான் பாசுபதாஸ்திரம் தர எழுந்தருளியகாலத்துக் காட்டிய விஸ்வரூபத் திருக்கோலத்தையும் கண்டிருக்கின்றேன். வதரிகாச்சிரமத்தில் நரநாரணர்களிருவர்க்கும் காலாக்கினிருத்திரர் எடுத்த இன்பவிஸ்வரூபத்தையும் கண்டிருக்கிறேன். பிரமன் சிருட்டித்தொழில் தெரியும் பொருட்டு பரமேசுவரன்கொண்ட

விஸ்வரூபத்தையும் கண்டிருக்கிறேன். சொல்லற்கரிய எமது குமரக்கடவுள் கொண்டிருந்த இந்த விஸ்வரூபக்கோலத்தைப்போல நாயேன் அந்த விஸ்வரூபக்கோலங்களிற் கண்டிலேன். இந்த விஸ்வரூபத்தின் காரணத்தை நாரணமூர்த்தியே உண்பால் கேட்டுத்தெரிந்துபோகவந்தனன் என்றுகூறத் திருப்பாற்கடற்பள்ளி முகுந்தன் கூறத்தொடங்குகின்றார்.

ஓ நாரதமுனிவரே! சிவபெருமானும்நாமுங்கூடியே குமரக்கடவுளாகினோம். அதனாலேதான் பசுபதியார் ஐந்து முகமும் என்னுடைய ஒரு முகமுங்கூடி ஆறுமுகத்தோடு ஆறுமுகன் விளங்குவது. சிவபெருமான் எட்டுத்தோளும் என்னுடைய நான்குதோளுஞ் சேர்ந்ததுதான் பன்னிரு காத்தனுக்குப் பன்னிரண்டு காங்களாயின. சிவபெருமான் சூலமும் என் சக்கரமும் இரண்டுங் கூடித்தான் வேலாயுதக் கடவுளுக்குச் சத்திவேலென்னும் வேல் இருமுகவேலாய்ச் சமைந்தது.

அரன்கலையாகிய சூரியனுனது நமது வலக்கண்ணினின்றும் பக்குவப்பட்டு உலகத்தை உண்டுபண்ணும் விட்சேப சத்தியே வள்ளியம்மையாராகத் தோன்றிற்று. சந்திரன் அமிசமே எனதுஇடக்கண்ணிற் பக்குவப்பட்டுத் தோன்றிய பரிபூரண சிவகலையே ஆவரண சத்தியான தெய்வகுஞ்சரியாயது. சிவபெருமான் அமிசமாகச் சூரிய சந்திர கலைகளாக எமது வலக்கண்ணிலும் இடக்கண்ணிலும் தோன்றிய விட்

சேபசத்தி ஆவாண சத்தியாம் வள்ளி தேவானைகளே குமாரக் கடவுளாகிய பிரம்மத்திற்கு வேறில்லாச் சத்திகளாக விளங்குகின்றனர்.

சுப்பிரமண்யன் என்னும் பெயர் சு—பிரமங்—ய என மூன்று பதங்களாலாயது. மத்தியபதம் சிவபெருமானுகும். கடைசியில் நிற்கும்பதம் சிவனை எத்தித்துதிக்கும் விண்டுவின் வடிவாம். இந்த பிரமங் என்னும் பதமும் ய என்னும் பதமும் முதற்பதஞ்சேர்த்துக்காட்டி இயைந்து ஒற்றுமை காட்டிச் சிவனும் மாலும் எனும் இருவருமே மூலமு முடிவுமில்லாச் சுப்பிரமணியனுக வேதஞ்சொல்லும்.

சரவண பவனென்னும் குற்றமற்ற மூன்றுபதங்களில் சரமென்றது நீர், வநம் என்றது இருப்பிடம். இவை இரண்டும் சேர்ந்து நாராயணன் என்னும் எனது பெயராகி நின்றது. அழகிய பவன் என்னும் பெரும்பதம் சிவனுகும். மயக்கமற சிவன் நாரணன் என்னும் இரண்டும் ஒன்றாய் ஆறெழுத்து மந்திரமாகும்.இதன் பொருளைமுற்றும் ஆராய்ந்தறிந்தால் ஞானப்பரம்பொருளாய குமரன் சிவன் வடிவே என்பது பொருளாகும் என வேதங்கள் கூறும்.

மலைகளெல்லாம் குமரக்கடவுள் இடங்களாகும். நிலம், மணல், பாறபாறை, கல்லு (மலை) என நிலம் நான்கு வகைப்படும். இந்த நாலும் எனக்கும் குமரக்கடவுளுக்கும் இட

மாகும். நிலம் எல்லாம் நான். பெருமலைகளெல்லாஞ் சிவபெருமான் வடிவாம். தரையில் நானும் மலையில் சிவனுமாக இருப்போம். இந்த இரண்டு இடங்களிலும் முருகக்கடவுள் இருப்பர். இன்னும் நாரத! கேட்பாயாக. வேங்கடமலையில் குகத்தீர்த்தம் ஏற்பட்டிருப்பதும் அம்மலையின் மத்தியில் மூர்த்திகரங்கொண்டு பன்னிருகரத்து மயில்வாகனக் கடவுளும் நாமும் அமர்ந்திருப்பதும் கவனிப்பாயாக.

கார்த்திகை நட்சத்திரத்தைப்பொருந்திய முன்கலை மூன்றும் பூமாதேவி, லட்சுமி, பார்வதி. பின் மூன்று கலை உருத்திரன், அனந்தேசன், சிவனுகும். இந்தவிதமாகிய கலைகள் ஆறும் கார்த்திகையோராறும். இவைகள் சிவவடிவும் மால் வடிவும் ஆகும். ஆதலினுல் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகக்கடவுளுக்கு ஓமம், செபம், பூசை, உபவாசம் அன்போடு செய்தால் சிவவிரதம் மால் விரதம் புரிந்தவர் பெறும் பெரும் பேறெல்லாம் பெறுவர். அகர உகர மகரங்கள்பிரமன், மால், சிவன் எனும் மூவராம். அந்த உகரமே குமரன் ஆகும். மகாமும் அகாமும் தேவகுஞ்சரியும் வள்ளியும் ஆவார்கள். இந்த அகர உகர மகரங்களே பிரணவவடிவும் ஆகும். வள்ளி தேவானையோடு முருகனே ஓங்காரம்ஆகும். இதுவேஉண்மை. நாரத! நன்ருய் அறிவாயாக என்று நாரணன் கூறி உடனே புறப்பட்டு முருகக்கடவுளைத் தரிசித்தற்காகக் கருடன்மேலேறி செந்தியம்பதிக்கு வந்தான். முருகனைப் பூசித்தான்.

முருகப்பெருமானும் மாமனுரென நாரணனைப் பூசித்தார். இருவரும் கந்தமாதனஞ் சென்றனர். பிரமதேவனும் அம் மலையிடத்து விமான வடிவமாக இருந்தான். சர்வேசனுகிய சிவபெருமானும் அங்கிருந்து சர்வலோகங்களையும் ரட்சித்து வந்தான். இவ்விதமாகச்சிறப்புற்று விளங்கும் இச்செயந்தி யம்பதியில் நாரணனும் புக்கு இருந்தான். கந்த புட்கரணி யின் பக்கத்தில் முருகக்கடவுள், வணங்குவார்க்கு அவர் வேண்டும் இட்டகாமியங்களை அருளி தேவர் துதிக்க வீற்றி ருந்தருளினுர். இத்தகைய முருகக்கடவுளை நினைப்பவரை யும் துதிப்பவரையும், வணங்குவோரையும், பூஜை செய்வோ ரையும் மாலுஞ் சிவனும் மகிழ்ந்து நோக்கி அவர்களும் பே ரருள் புரிவர் என்று வியாதர் சுகருக்குக் கூறினுரென்று சூதர் நைமிசாரண்யர்களுக்குக் கூறியருளினுர்.

---

## கஎ-வது பலகதை உபதேசித்த அத்தியாயம்.

நாவலந் தீவிற் செந்தில் நாயகன் அருளி னலே
தேவரும் முனிவர் மற்றுந் திகழ்நரர் பெற்ற பேற்றை
ஆவலின் வியாதர் முன்னுள் அணிசுகர் கேட்கச் சொற்ற
தூவளக் காதை கேட்டோர் துயரற வாழ்வர் மாதோ.

எனது அருந்தவப் புதல்வனுகிய சுகா! இன்னுமொரு கதை சொல்லுகின்றே னென்று வியாதர் குமரக்கடவுள் பாதத்தைக் கும்பிட்டேத்திக் கூறுகின்றுர்.

முன்னோர் உகத்தில் துருவாசர் பிரமலோக வழியாக வரும்போது அங்கொரு தெய்வமாது துருவாசரைப்பணிந்து தன் கையிலிருந்த ஒருதெய்வ மாலையைக் கொடுத்துப் பணிந்து அகன்றுள். துருவாசர் மாலையின் அழகையும் மணத்தையுங் கொண்டாடிக் கண்ணிலும் முடியிலும் மார்பிலும் ஒற்றி ஆநந்தத்தோடு வரும்வழியில் பொன்னுலகத்தில் இந்திரன் வெள்ளையானையின்மேற் பவனி வருவதுகண்டு அவனருகிற் சென்று அம்மாலையை அவனுக்கு அளித்தனர். இந்திரன் செருக்கால் அதை வாங்கித் தன் யானையின் மத்தகத்தில் வைத்தான். யானை அதனைத் தன் துதிக்கையால் எடுத்துச் சிதைத்துவிட்டது. துருவாசர் கண்டு சினங்கொண்டு செல்வச்செருக்காலன்றோ? எடா! இந்திரா! நான் தந்த மாலையை இகழ்ந்தாய் என்று சபிக்கத் தொடங்கிக் கூறுகின்றார். நான்றந்த மாலையை நீ சென்னியிற் சூடிக்கொள்ளாது யானை மத்தகத்தில் வைத்ததால் அவ் யானை அதனை யெடுத்தழித்தது. ஆகையால் இப்பாவம் நீங்க அவுணர் நின் செல்வமெல்லாங் கவரத் திருமகளும் நினை விட்டகல வறுமையுற்று சிறியர்போல நீ திரிந்துழலக் கடவாய் எனச் சபித்தனர். இந்திரன் அறிவுவந்து பிழையோர்ந்து பணிந்து வேண்ட இச்சாபம் நீ செயந்தியம்பதியிற் சென்று தவம்புரிந்து குமரக்கடவுளைத் துதித்தால் குமரக்கடவுள் அருளால் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடை

வார்கள். அப்பொழுது திருமகள் தோன்றுவாள். அவள் தரிசன விசேஷத்தால் உனக்குப் பழைய நிலைமை உண்டாகும் என்றுஞ் சாபமுந்தீருமென்றும் அருளிச்செய்து அகன்றார்.

சாபம்வந்து கிட்டியதால் அசுரர்கள் போர்புரிந்து இவன்செல்வம் அனைத்தையும் கவர்ந்துசென்றனர். இவனும் செல்வ நீங்கி, அரசுநீங்கி வருந்தி விண்ணுலகம் விட்டுவந்து மண்ணுலகம் அடைந்து செயந்தியம்பதியில் குமரக்கடவுளை நினைந்து தவஞ்செய்துகொண்டிருந்தான். குமரக்கடவுளருளால் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தனர். அதில் திருமகள் கற்பகம் சுரபி முதலிய தோன்றின. திருமகள் தரிசனம் இந்திரனுக்குக் கிடைத்தது. உடனே முனிவர் மொழிப்படி வெற்றி செல்வம் முதலிய மீண்டும் பெற்று தேவலோகுக்கு அரசன் ஆயினன். இது இப்படி இருக்க, வெள்ளை யானையானது எனது இறைவனுக்கு இச்சாபம் வர நானே காரணமாக இருந்தேன். செய்த தீவினை செய்தவர்க்கு ஆதலால் நானும் செயந்திபுரம்சென்று இப்பாவத்தைச்செய்த என் கைகளால் முருகக்கடவுளை மலர்கொண்டு அர்ச்சித்து நீக்கிக்கொள்வேனென்றுகூறி, நாரதரிடம் உபதேசம்பெற்று செயந்திபுரம் வந்து தீர்த்தத்தில் நீராடி மலர்களால் ஐந்து தினம் குமரேசனைப் பூசித்துப் பாவநீங்கித் தன்னிறைவன்பாற்சென்றது. இன்னுமொரு கதை கூறுகிறேனென்று பின்னுங் கூறுகிறார்.

செயந்தியம்பதியில் வீற்றிருந்தருளும் குமரக்கடவுளுக்குக் களிப்பூட்டிச் சாமத்திற்கு ஒரு பூசையாக எட்டுச் சாமத்திற்கு எட்டுப்பூசை நடக்கும். இந்த எட்டுப்பூசையையும்எட்டுப்பகுப்பார்கள் முறையே செய்வர். அவர்கள் பேர் சொல்லுகிறேன். பகல் காலம் நாலு. அதில் முதற்கால பூசை பிரமனது பூசை. இரண்டாங்காலம் பல முனிவர் பூசிக்கும் பூசை. மூன்றுங்கால பூசை கந்தருவர் சித்தர் பூசிக்கும்பூசை. நாலாம் பூசை அட்டதிக்குப் பாலரோடு இந்திரன் புரியும் பூசையாகும். இரவில்வரும் ஐந்தாங்காலம் லட்சுமிமுதலிய சத்திகளுக்குவந்த பூசை. ஆறுங்கால பூசை அவுணர்களும் ஆதிசேடன் பூசையுமாகும். ஏழாங்கால பூசை வள்ளிதேவானையார் செய்யும் பூசையாம். எட்டாங்கால பூசை கங்கை முதலிய நதிகளோடு கண்ணன் புரியும் பூசையாகும். இப்பூசைகளைச் செய்தோரும் தரிசித்தோரும் வீரவாகுபெற்ற பெரும் இன்பமெலாம் பெற்று இன்புற்று இருப்பர். இவர்களுக்கு எழிற்குமரக்கடவுள் தன்னருள் முற்றுந்தந்திடுவர். இன்னும் ஒருகதைஉண்டு. அதனையுங் கூறுகிறேன் கேளென்று வியாதர் கூறுகின்றார்.

தில்லையில் நடேசர் திருநடனங் கண்டுவக்கும் புலிக்காலை உடைய கவுதமர் நடராஜாவினிடந் தீர்த்தங்கள் பல ஆடிவருவதற்கு விடைபெற்று இச்செயந்தியம்பதியில் வந்து கோயிலுக்கு ஐந்துகூப்பிடு தூரத்தில் ஓமகுண்டங்களை வேத முறைப்படிஏற்படுத்தி ஓமஞ்செய்துகுமரக்கடவுளைப்பூசித்து

வணங்கினர். அப்போழ்து இது தெரிந்த கோதாவிரி என்னும் இவர்புத்திரி தந்தைவேள்விகண்டு மகிழவும் தந்தைக்கு வேள்வி செய்தவுடனே வைபிருத ஸ்நானஞ் செய்வதற்காகவும் வந்தடைந்தாள். தந்தை மகிழ்ந்து நீ பொருநை என்னும் வேதமாதுக்குத் துணையாய் இங்கேயேஇருஎன்று கூறி முருகனருள் பெற்றுப் பொன்னம்பலம் உற்று அவர் திருநடனங்கண்டு மகிழ்ந்திருந்தார். கோதாவரி தந்தை சொற்படி பொருநைக்குத் துணையாய் அங்கேயே இருந்து வருவோர்க்கு அமுதனைய நீராருத்திக் குமரனருள் பெற்றிருந்தது என்றுகூறி இன்னுமொரு கதை கூறுகிறேனென்று கூறுகிறார். வசிட்டர், வாமதேவர், சாபாலி, காசிபர், மார்க்கண்டர், கவுதமர், முற்கலர், கவுசிகர் ஆகிய இவ்வெட்டுப் பேரும் காசியிற்சென்று கங்கையாடிச் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து நெடுங்காலம் அங்கிருந்தார். பின்னர் பல தீர்த்தங்களில் மூழ்கித் தலங்களில் தங்கி மூர்த்திகளைத் தரிசித்துக்கொண்டே வந்தவர் செயந்திபம்பதியிலும் தங்கி செயந்தியம்பதியில் உள்ள இருபத்துநான்கு தீர்த்தங்களிலும் நீராடி குமரக்கடவுளைப் பூசித்து இன்பப்பாவச முற்றவராயினர். அவர்கள் தனித்தனி தங்கள் வேத வாக்கினுஞ் சிறந்த திருவாக்குகளாற் சொல்லுகின்றனர்.

1. உலகுதனில் இகபோகமறுமை இன்ப முத்திகளைத் தரும் பலகோடி தலங்கள் உண்டு. அவைகளெல்லாம் குமரக்

கடவுள் குடிகொண்டெழுந்தருளி இருக்கும் செயந்தி புரத்திற்கு ஈடாகாது. அவைகள் ஒப்புநோக்கின் செயந்திபுரத்திற்கு மிகத்தாழ்ந்தனவே என்று வசிட்டர் திருவாய்மலர்ந்து போற்றினர்.

2. பிரமகத்தி, கள்ளருந்தல், வேத சாத்திர நிந்தை பேசும்பாவம் ஆகிய இவைகளெல்லாம் செயந்திபுரத்து ஒருநாள்உபவசித்திருந்தால் அப்பாவங்கள் நீங்கி மேலாய பாகதி சேர்வர். இது திண்ணம் இது திண்ணம் என்று வாமதேவ முனி கூறிப்போற்றினர்.

3. இந்த உலகத்தில் உள்ள கடவுட்டன்மை உள்ள நதிகள் தரும் பலனையும் இச்செந்தியம்பதித் தீர்த்தங்கள் தரும் பயனையும் சீர்தூக்கி எடை பார்த்தால் இங்குள்ள இனிய கந்தபுட்காணிக்கு இணையாகாது என்றும் இது சத்தியம் என்றும் சாபாலி சாற்றிப்போற்றினர்.

4. பிறந்த நாள் முதலாக ஒருவன்தான் இறக்குநாள் வரையிலும் பிரியாது பிரயாகையில் நீராடிச் சிறப்புற்ற ஒருவன் பெறும் கதியிலும் இந்தச் செயந்திபுரத்துக் கடலாடிக் குமரக்கடவுளைக் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் தரிசித்தோர் ஒரு கோடிமடங்கு அதிகங்கதிபெறுவர் என்று காசிபர்கவினுறப்புகழ்ந்து போற்றினர்.

5. நூறு வருடகாலம் மணிகன்னிகையில் மூழ்கும் பயன் இந்தச் செயந்தியம்புரத்து ஒருதரஞ்சென்று குமரக்

கடவுள் தாண்மலரை வாழ்த்தித் தரிசிக்கும் அவர்களுக்கு இலேசாகக் கிடைக்குமென்று பதினெண் புராணங்களையும் விரித்துரைத்த மார்க்கண்டேயர் ஆணையிட்டுத் தன் நாத் தழும்பேறக் கூறிப் போற்றினர்.

6. கொடிய பஞ்சகாலத்தில் தினமும் ஆயிரம் பேருக்குஉள்ளுவந்து முகமலர்ச்சி காட்டி முகமன்கூறி அன்னமிட்டவர்கள் பெறும் பயனை இந்தச் செயந்தி புரத்தில் ஒருநாள் தங்கி குமரக்கடவுளைப் போற்றியவர்கள் பெறுவார்களென்று கவுதம முனிவர் காதலொடு கழறிக் கூறி கனிவோடு போற்றினர்.

7. தருப்பைப்புல்லின் நுனியாற் கொண்ட நீரையருந்தி காமமாதியவற்றை நீக்கி மௌனத்தோடு ஒருவருடம் புரியும் அந்தத் தவத்தைக்காட்டிலும் அதிக மேன்மை குமரக்கடவுள் கோயில் கொண்டருளி இருக்கும் செயந்தியம் பதியில் ஒருநாள் வசித்துக் குமரேசனைப் போற்றினவர் பெறுவரென்று முற்கலமாமுனிவாரும் தன் திருவாக்கால் மொழிந்து முறையாகப் போற்றினர்.

8. பரிமகநூறும், வாசபேயமகம்நூறும், அதிசயப் படும்படி பிறந்ததிலிருந்து சாம்வரை தினமும் மேன்மையுறச்செய்ததன் பயனைச் செயந்திபுரத்தில் வசித்தவர் தினமும் பெறுவரெனப் பிரமன் சனகாதியோகியர்களுக்கு நாளும் கேட்கக்கூறி யருளினரென இது சத்தியமென்று கோ

சிகமுனிவர் கூறிப்போற்றினர் என்று கூறி வேதவியாசர் சுகரை நோக்கி இன்னுங் கூறுகின்றார்.

அரித்துவாரம் என்ற திவ்விய தலத்தில் காயாம்புவண்ணனுகிய கேசவன் சந்நிதானத்தில் ஒரு மாதம் முழுகும் பலன் இந்தச் செயந்தியம்பதியில் ஒருதரம் மூழ்கினவர்கள் பெறுவர்.

களவிலே திரிவோர்கள், தன் தம்பிமனைவியைக் காதலித்த மறையோர், மறையோரை நிந்தனை செய்யும் அறிவிலிகள், கைம்பெண்களைக்கலந்து கருச்சிதைக்கும் பாவத்தைச் செய்வோர்கள் இந்தச்செயந்திபுரத்தில் ஒருநாள் தங்கி முருகக்கடவுளைத் துதித்தால் அப்பாவங்களெல்லாம் அகலப் புனிதராகிக்குமரனடித்தாமரைக்கு அருகர் ஆவர் என்று வியாதர் கூறிப் பின்னும் ஒரு கதை கூறுகின்றார்.

செயந்திபுரத்திலே தேவர்கள் போற்ற அமரும் குமரக் கடவுளை அன்போடு கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்துப் போற்றாதவர்கள் சந்திரசூரியர்உள்ளவரை கழுதைச்சென்மம் எடுத்துக்கஷ்டப்படுவார்கள் என்று பழமையாகிய நூல்களெல்லாம் கூறுநிற்கும். இன்னும் மலம் உண்ணும் கழுதையாகப்பிறந்தாலும் அதன் வெறுக்கத்தக்க தேகம் செயந்திபுரத்து ஒழிந்தால் ஞானம் பெற்று பிறப்பற்று அச்சிவன் குமரேசனடிச்சரணஞ்சாரும் எனவும் நூல்கள் கூறுநிற்கும் என்று கூறி இன்னும் ஒரு கதை கூறுகிறார்.

அரிய தவங்களைச் செய்யும் காசிபர் மனைவியாகிய அதிதி நல்ல புத்திரர்களைப் பெறுதற்கு ஆசைகொண்டு நாரத முனிவரிடஞ் சென்று தன் விருப்பத்தைச் சொல்லி இதற்கு ஒரு விரதம் எனக்கருளிச்செய்ய வேண்டுமென்று கேட்க நாரதர் குமரக்கடவுள் அருள்பெறுதற்கு ஏற்ற ஒரு விரதம் சொல்லுகிறேன் என்று சந்தான விரதமுறையைக் கூறுகின்றார். கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியில் செயந்திபுரம் சென்று அங்குள்ள கந்தபுட்காணி முதலான இருபத்துநான்கு தீர்த்தங்களிலும் விதிப்படி ஸ்நானஞ்செய்து குமரக்கடவுள் விரும்பும் இந்த விரதத்தை ஒருவருடம் அநுஷ்டிக்கவேண்டும். இருபத்துநான்கு தீர்த்தத்திலும் முழுகிக் கோயிலைப் பன்னிரண்டுதரம் வலம் வந்து பன்னிரண்டுதரம் அவன் பாதத்தைப் பணிந்து எழுந்து மாப்பாடென்னும் இடத்திற்சென்று வடக்கு முகமாக இருந்து குமரக்கடவுள் பாதத்தையே மனதிற் பதித்துத் தன் மோதிரவிரலால் மேற்பக்கத்தில் சக்கரமும் கீழ்ப்பக்கத்தில் முத்தலைச் சூலமும் மத்தியில் வேலாயுதத்தையும் தரையில் மேற்கூறிய மூன்று வகுப்பாகிய நிலத்தில் வரைந்து சோடச விதிப்படி பூஜைசெய்து பன்னிரண்டு நாளளவாக அன்போடு வந்தனைபுரிந்து குமரக்கடவுள்கோயிலைப்பார்த்து சுப்பிரமணியம் என மூன்றுதரம் ஜெபித்துக் கண்டத்தால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு உரக்கக்கூவி சூரன் கதியடைந்த அவ்விடத்தில் கடலில் நீராடித் திரும்பவுங் குமரேசன் ஆல

யஞ்சென்று சந்நிதியிற் குருமுகமாகக் கும்பம் ஒன்று நிறுத்தித் துதித்துப் பதினாறு விதத்திற் பூஜைசெய்து கும்பத்தை நீரில் மூழ்கச்செய்து குமாரக்கடவுளைத் துதித்துப் பன்னிரண்டு மாதமுங் குற்றமற்ற மறையந்தணர்க்கு தட்சணை தந்து அவர்களை உண்பித்து ஆறெழுத்தையும் மனத்திற்பதித்து வேற்கரக்கந்தனைச்சிந்தையில் வைத்து உபவாசம் இருந்து பின் அடுத்தநாள் பாணைச்சாப்பாட்டை விதிப்படி உண்டு, இந்தப் பன்னிரண்டு மாதமும் செய்து கார்த்திகைமாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் இந்த விரதத்தை முறைப்படி செய்து கற்ற அந்தணர்க்குக் கோதானம் முதலானவை முறையே செய்து வந்தவர் புத்திரப்பேறும் இன்னுந் தாம் விரும்பிய மற்றைப்பேறும் பெறுவரெனக் கூறிப் பின்னும் கூறுகிறார்.

இந்த விரதத்தை மறையோர் செய்யின் சாத்திரங்களெல்லாங் கற்று மிகப் புத்திரப்பேறு பெறுவர். மன்னவர் செய்யின் சத்துருக்களைச் செயித்து செம்மையான நிலையையும் புகழையும் பெற்று, பல புத்திரர்களைப் பெற்றுச் சிறப்பாக வாழ்வர். வணிகர் இந்நோன்பு செய்யின் குபேரனைப் போற் றனம்படைத்துப் புத்திரசந்தானத்தோடு வாழ்வர். வேளாளர் புரியின் பெருஞ்செல்வம், புகழ், புத்திரசந்தானம் பெற்று இனிது வாழ்வர் என்று கூறியருளினர். அதிதியும் களிப்படைந்து நாரதமுனிவரை ஆசிரியராகப் பாவித்துத்

துதித்துச் சந்தான நோன்பு ஒருவருடம் புரிந்து குமரக் கடவுளின் அருளால் இந்திர உபேந்திரர்களைச் சந்தோஷத்தோடு பெற்றுச் சந்தோஷத்தோடு இன்றுவரை விளங்குகின்றாள் என்றும், இவ்விரதம் இயற்றினவர் குமாரனருளுக்குப் பாத்திரர்களாகி இட்டசித்தியெல்லாம் பெற்று இனிதிருப்பர் என்றுங் கூறி, இன்னுமொருகதை கூறுகின்றார்.

ஒரு வேதியன் வேதம், வேதாங்கங்கள், கலைகள், புராணங்கள் எல்லாங்கற்று அறிந்து பிறர்க்குரைத்துப் புகழ் படைத்திருந்தான். இவன் முற்பிறப்பிற் செய்த பெரும் பாவத்தொடர்பால் தாய், தந்தை, குரு, தெய்வம், பெரியோர் முதலியவர்களையும், வேதங்களையும் நிந்தனை செய்யத் தொடங்கினன். பாவங்களை மிகவுஞ் செய்தான். இவன் மூத்து உயிர்விட்டான். யமதூதர்கள் வந்து பற்றிக்கட்டி இவன் செய்த பாவங்களுக்காகப் பெருநரகிற்றள்ளித் துன்புறுத்திப் பின் கழுதைப் பிறப்பாய்ப் பிறக்கச்செய்தனர். இவன் பாண்டிநாட்டிற் கழுதையாகப் பிறந்து கஷ்டப்பட்டு முற்பிறப்பில் குருமுகமாக வேத முதலியன கற்ற புண்ணியத்தால் சிந்துபுரத்து வந்து முதிர்ந்து இறந்தான். சிந்துபுரத்தில் இறந்ததனால் தேவர் தேவவிமானத்து வணங்கி ஏறச்செய்து தேவலோகத்துக்குக் கொண்டுசென்றனர். அங்கு இன்புற்றிருந்து பிரமலோகஞ் சென்று இன்றுவரை இன்புற்று இருக்கிறானென்று வியாதர் கூறிப் பின்னுங்

கூறுவர். சண்டாளத்துவம் பூண்ட இவனுக்கே இப்பேறு உண்டானல் இந்தச் செயந்திபுரத்தில் வேதம்ஒதிக் குமாரக் கடவுள் பாததாமரைகளைத் துதித்து இருப்போரும், தான தருமங்களைச் செய்வோரும் பெறுங்கதி இவ்வளவென்று எடுத்து உரைக்கக்கூடிய அளவல்ல என்று வேதவியாசர் சுகருக்குக் கூறினரென்று சூதர் நைமிசாரண்ய வாசிகளுக்குக் கூறியருளினர்.

---

## கஅ-வது இயமனுக்குச் சிந்துபுர வைபவம் உரைத்த அத்தியாயம்.

கொடும்பாவஞ் செய்யுந் தீய கொலையாளர் தாமும் இந்த
நெடுமாடச் செந்திற் கண்ணே நேரெமது சந்நி திக்கு
வடுவோட வந்தா லன்னுர் வளர்பவங்கள் நீங்கும் கூற்றே
தடுமாற வேண்டாம் என்ற தனிமுருகன் பதங்கள் போற்றி.

வேதவியாசர் சுகரை நோக்கிச் சொல்லுகின்ருர். எப்படிப்பட்ட பாவிகளானலும் சிந்துபுரம் அடைந்தால் தங்கள் பாவந்தொலைந்து புண்ணியராகித்தேவராவர். இதற்கொருகதை சொல்லுகின்றேன் கேள் சுகா என்று கூறுகின்ருர். கடல்மீது கப்பலேறி வியாபாரஞ் செய்வோனும் மீன் புலாலுண்பவனும் கற்றுணர்வில்லாதவனும் மிலேச்சத்தன்மையுடையவனும் ஆகிய வேடகுலத்தான், தன் ஆட்களோடு கடலிற்சென்று கடலில்வரும் வியாபாரிகளைக் கொன்று

கொள்ளையடிக்கும் கொடியன். தீமையையே செய்வோன். மறை வேதியர்களை அடித்து அவர் யாகப்பசுக்களைக்கவர்ந்து சென்று உண்போன். பத்திமான்களை வெட்டித் தன் புலைச் சமயமே சமயமென்று திரியும் பாதகன். ஒருகாலத்துச்சிந்து புரம் வந்து குமரக்கடவுள் திருக்கோயிலுக்கு முன் வந்து ஆலயம் என்று கேட்டுக் கோயிலைத் தகர்த்து விடவேண்டு மென்னும் எண்ணத்தோடே உள்ளே நுழைந்தான். அங்கு நின்ற குமரக்கடவுளின் திருவுருவத்தைக்கண்டு இது என்ன உருவென்று கேட்டான். அங்கிருந்த திரிசுதந்தாத் தர் ஆகிய மறையோர் குமரக்கடவுளின் பிரபாவமெல்லாங் கூறினர். உடனே அக் கிராதன் அரனெவன்? அவன் மகனெ வன்? என்று வாளையுருவிக் குமரக்கடவுள் திருவுருவைச் சிதைக்க ஓடினான். சந்நிதி வாயிலில் விழுந்து இறந்தான். உடனே யமதூதர்கள் இவனைக்கொண்டுபோகக் கூட்டங் கூட்டமாக வந்தனர். குமாகணத்தலைவர்கள் அந்தயமபடர் களை அச்சுறுத்தி வெருட்டி எமது குமரக்கடவுளுக்கு அடி யன், எம்மோடிருக்கத்தகுந்தவன். நீங்கள் இவனைத்தொடர் வது சரியல்லவென்று கூறி ஓட்டி விட்டனர். அவர்கள் உட னே சென்று தங்கள் அரசனாகிய யமதருமராஜனிடஞ் செ ன்று நடந்தவற்றைக் கூறினர். யமதருமராஜனும் உடனே புறப்பட்டுச் செயந்திபுரம் வந்து குமரக்கடவுளை வணங்கித் துதித்தான்.

விருத்தம்

தேவர் துயரந் தீர்த்தருளும் தேவே! எங்கள் திருமுருகா!
யாவர் தானே யானாலும் அடைந்தா ரானல் இன்பருளும்
ஆவற் குமரா! ஆறுமுகா! அலையார் செந்திற் பதியானே!
மேவ வந்த அடியேற்கும் மிகுநல் அருளே புரிவாயே.

இந்தவிதமாக பலவிததோத்திரரூபமாகத்துதித்த எமனை நோக்கி குமரக்கடவுள் உன் துதிக்கு மகிழ்ந்தோம். என்ன வேண்டிவந்தாய். கூறு என்று கூறினர். எமன் கூறுவான். ஆண்டவனே! பரமேச்சுரனாணையால் தர்மஞ்செய்தவரை மோட்சத்துக்கும் பாவஞ்செய்தவரை நரகத்துக்கும் அனுப்பிவருகிறேன். இப்பொழுது இறந்த இந்த மிலேச்சன் கொடும் பாதகமே செய்ததால் அவனை நரகத்துக்கு அனுப்ப என் எமபடர்களை அனுப்பிப் பிடித்துவரச்சொன்னேன். பெருமானே! உன் திருவடிக்கருகாக இருக்கும் கணநாதர்கள் அவர்களைத்தடுத்து ஓட்டிவிட்டார்கள். இதன் ரகசியந்தெரியக்கூறவேண்டு மென்னக் காலன் மிக வினயமாகக்கேட்க முருகப்பிரான் திருவாய் மலர்ந்தருளுகின்றார். எப்படிப்பட்ட பாவங்களைச் செய்தவராயிருந்தாலும் திரிசுதந்தரர்கள் சூழ இருக்கும் எம்முடைய கோயிலில்வந்து எம்மைத்தரிசித்தால் எல்லாப்பாவமும் நீங்கிப்புண்ணியராகி எமது உலகஞ்சார்வர். இந்தத்தீயவன், பாவமேசெய்திருந்தாலும் திரிசுதந்தரரிடம் உரையாடி நமது சந்நிதியுற்று எம்மைத் தரிசித்தபடியால்

எம்முலகஞ் சார்ந்தான் எம்பாதத்தை அடைந்தானென்று கௌரிபாலனாகிய குமாரக்கடவுள் கூற யமன் கேட்டு மகிழ்ந்து துதித்துத் தன் உலகஞ்சென்றான். ஆகையால், சுகா! இந்தச் செயந்தியம்பதிதான் குமாரக்கடவுளின் சாயுச்சியம் தரும்பதி; இது சத்தியம் என்று கூறி யருளினர் வியாதரென்று சூதர் நைமிசாரண்ய வாசிகளுக்குக் கூறியருளினர்.

---

## ௧௯-வது பிரமன் தேவர்கட்கு உபதேசித்த அத்தியாயம்.

பாவ மெல்லாம் பறித்தெடுத்துப் பத்திப் பயனும் வீடருளும்
ஆவன் முத்தித் தலத்திற்கோர் அடைவா வைத்த எணியெனக்
காவற் கடவுள் உந்திவரு கமல போதன் கனிந்துரைத்த
சேவற் கொடியோன் வாழ்செந்தில் சிறந்து வாழி என்மனத்தே.

இன்னுமொரு கதை சொல்லுகின்றேன் சுகா! கேட்பாயாக என்று வேதவியாசர் கூறுகின்றார்.

தேவர் நிந்தனையும் பெரியோர் நிந்தனையுஞ் செய்யும் ஒரு வணிகன் இருந்தான். இவன் சோரவாணிகத்தாலேயே பொருள் தேடுவோன். தானும் ஈயான். ஈவோரையும் தடுக்

கும் சண்டாளன். புண்ணியபாவம் பொய், சொர்க்கம், நரகம் பொய். தெய்வமாவது பூதமாவது இது எல்லாம் பொய் என்று அதிகப் பிரசங்கஞ்செய்யும் அசடன். பணமே தெய்வம், பணமே சுவர்க்கம், பணமே போகம் என்னும் உறுதியுடையோன். இவன் மிகுபொருள் கப்பல் ஏறி வாணிகஞ் செய்து சம்பாதித்துத் திரும்பிவரும் போழ்து பெருங்காற்றும் பெருமழையும் சுழற்றி யடித்ததால் கப்பல் முழுகிவிட்டது. இந்த வணிகன் மிதந்து நீந்தித் தெய்வச்செயலாய்ச் செந்தியம்பதிக்கருகில் முகாரம்ப தீர்த்தத்தில் வந்து சேர்ந்தான். அங்கு வந்து சேர்ந்ததும் மூப்புத்தளர்வாலும் மெலிவாலும் உயிர்விட்டான். அங்கிருந்தோர் அவனை எடுத்து வேத விதிப்படி தகனஞ்செய்தனர். அப்போழ்து தேவர்கள் அவனைத் தெய்வ விமானத்தில் ஏற்றிக்கொண்டு சென்றனர். பாவியாகக் கொடியோனுகச் சண்டாளனுக இருந்தும் முகாரம்ப தீர்த்தத்தில் மூழ்கி உயிர் விட்டமையாலும் செயந்தியம்பதியில் தகனஞ் செய்யப்பெற்றமையாலும் சிவலோகஞ் சென்று சிவசாரூப்பிய பதவியை அடைந்தான். இது இவ்வாருனல் வேதவிதி கடவாத பெரியோர் புண்ணியவான்கள் செயந்தியம்பதி சென்று குமரக்கடவுள் திருவடி தரிசித்துத் துதித்தவர் ஈற்றிலடையும் பயன்பெரும் பயனே என்றுசொல்லவும் வேண்டுமோ. இத்தகைய செயந்தியம்பதிக்கு நிகரென்று வேறு ஒரு தலத்தை ஒப்புச்சொன்னுல் பாவம் செய்தவராகக் கூற்றுவன் உலகஞ்சேர்வர்.

இந்தப் புண்ணிய தலத்தின் சிறப்பை இந்திரன் முதலிய தேவர்களுக்கு எடுத்துரைக்கும் பிரமன் இது எண்ணுதற் கரிது எனவும் காசி, ஜெகநாதம், துவாரகை, பிரமாபுரம், பஞ்சலிங்கத்தலங்கள், திருவரங்கம், திருக்குற்றாலம், நெல்வேலி, திருக்களாவனம், தருப்பசயனம் முதலிய திருப்பதிகளுக்கெல்லாம் இதுமிக மேலானது என்று கூறியருளினன். செயந்தியம்பதி தெரியாதவர்களே எமலோகஞ் சேர்வர். செயந்தியம்பதியைக் கண்டவர் கேட்டவர் எமலோகஞ்சேரார். மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் செந்திலிலிருக்கும் குமாரக்கடவுளைப் போற்றுவோர் பாவங்களெல்லாம் நீங்கப் பெற்று சிவசங்கரன் திருவடி நீழல் சார்ந்தின்புறுவர்.

மாசிமாதம் முப்பது நாளும் செந்தியம்பதியில் முகாரம்பதீர்த்தத்தில் மூழ்கினவர் எத்தலத்தும் நீங்காப்பாவத்தைப் போக்கி முத்தி வீடுபெறுவர். நூறு வேள்விசெய்து பெறுபவர் பெறும் பயனிலும் கோடிபங்கு செயந்தியம்பதி முகாரம்ப தீர்த்தத்தில் ஆடினவர் பெறுவர் என்று வேதங்கூறும்.

கார்த்திகை மாதத்து கார்த்திகை தீபத்தில் ஆறுமுகனைத் தரிசித்தோர்க்குப் பிறகு ஜனனமே இல்லையாகும்.

கார்த்திகை மாதத்துக் கார்த்திகையில் செந்தில் ஆண்டவன் கோயிற்றீபம் பார்ப்போர்க்கும் ஜனனமில்லை என்று தேவர்களுக்குப் பிரமன் கூறிப்பின்னுஞ் சொல்வான். கற்ற

வரானாலும் கல்லாதவரானாலும் செயந்தியம்பதியில் 
தோர் சிவபெருமான் அழகிய திருவடியை அடைவர். 
சத்தியம். இந்தச்செயந்தியம்பதி மோட்ச வீட்டுக்கு
ஏணிபோல் இருக்கிறதென்று கூறி முருகக்கடவுளை அ
வர்கள் பரவும்படிசெய்து தானும் பாவிப்பூசித்திரு
என்று வேதவியாசர் சுகருக்குக் கூறினரென்று சூத
மிசாரண்ய வாசிகளுக்குக் கூறியருளினர்.

---

## உ௰-வது சுகப்பிரமரிஷி பூஜை பண்ணி
## அத்தியாயம்.

வேதநல் வியாதர் பெற்ற வித்தகச் சுகர்தான் முன்
நாதனற் செந்திற் கந்தன் நவில்மகாத் மியத்தைப் பெ
ஓதமுன் கேட்டுச் சென்றுள் உவப்புறச் செயந்தி நா
பாதமுன் பணிந்து போற்றிப் பரவருள் பெற்றான்

நைமிசாரண்ய வாசிகளே! வியாதர் சுகருக்குச் சொல்லி
யவாறு செயந்தியம்பதி மகாத்மியஞ் சொன்னோம். பின்
நிகழ்ந்ததுஞ் சொல்லுகின்றோம். தந்தை கருணையோடு மக
னாகிய சுகருக்கு முறையே சொல்லிமுடித்து ஆசீர்வதித்து
தன் தவத்துக்குச் செல்வாராயினர். கேட்ட சுகர் குமரக்
கடவுளிடத்துப் பேரன்பு பூண்டவராய்ச் செயந்தியம்பதியிற்

சென்று முருகப்பிரானைத் தரிசிக்கவிரும்பி வடக்கே இருந்து புறப்பட்டு வழியிலேயுள்ள சிவஸ்தலம் விஷ்ணுத்தலங்களி லெல்லாஞ் சென்று தீர்த்தங்களில்ஆடி மூர்த்திகளைத் தரிசித் துத் தலங்களிலுறைந்து பின் செயந்தியம்பதிக்குவந்து வேத விதிப்படி இருபத்து நான்கு தீர்த்தங்களிலும் முறையே மூழ்கிக் குமரக்கடவுளைத் தரிசித்துப் பூசித்து அர்ச்சித்து வேத தத்துவார்த்த உண்மை மொழிகொண்டு போற்றித் துதித்தனர்.

நேரிசை ஆசிரியப்பா.

அண்டமும் அணுவும் ஆனாய் போற்றி
கண்டாகல் வேதக் கனியே போற்றி

உடலுயிர் ஆன உறவோய் போற்றி
திடமன வாக்காந் திருவே போற்றி

சகம்பல ஆன சாமி போற்றி
அகம்புக் குறையும் அருளே போற்றி

ஓமும் ஆன ஒளியே போற்றி
பாமுகம் பரவப் படுவாய் போற்றி

சங்கரர் பெற்ற தனயா போற்றி
அங்கண் வந்த அழலே போற்றி

சக்கரர் மருகனுஞ் சண்முகா போற்றி
அக்கரம் ஆறுக் கமைந்தவா போற்றி

பங்கயில் சரவணப் பாலா போற்றி
ஐங்கரன் பின்வரு அத்தா போற்றி

வள்ளியை மணந்த மன்னே போற்றி
புள்ளி மயிலூர் புலவா போற்றி

குஞ்சரி மகிழும் குமரா போற்றி
விஞ்சரி பாவும் வேலா போற்றி

அரிஅரன் உருவாம் அணியே போற்றி
தெரிபழம் பொருட்குந் தேசிகா போற்றி

செயந்தியம் பதிவாழ் செவ்வேள் போற்றி
நயந்த வேத நாதா போற்றி

பாசக் கடலிற் படாது
நேசநின் றுளருள் நேய னேற்கே.

எனவேண்ட ஆறுமுகப்பெருமான் சுகனை எடுத்து அணைத்துச் சுகப்பிரமமே! உனக்குத் தத்துவ ஞானமெல்லாம் கைவரும் அருள்புரிந்தேம். நீபிரமமாகிப் பிரமத்தொடு கலக்கும் நயமுஞ் செய்தேம் என்று அருளிச்செய்தார். சுகரும் விடைபெற்றுத் தன் தலத்துக்கேகினர். குமரேசனும் வள்ளி தேவானை சமேதராய் செயந்தி யம்பதியில் என்றும் தேவர்கள் முனிவர்கள் சூழ வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் செய்துகொண்டிருக்கின்றார்.

இப்புராணத்தைக் கேட்டவர் படித்தவர் எழுதினவர் பாராட்டினவர் பூசித்தவர் குமரன் அருள் பெறுவரென்று சூதர் நைமிசாரண்ய வாசிகளுக்குக் கூறியருளி விடைபெற்றுத் தன் இருப்பிடஞ் சென்று இன்புறு தவத்தில் அமர்ந்தார்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழி வேதம் மறைவாழி
வாழி சைவ அருணெறியே
வாழி கந்தன் மலர்த்தாள்கள்
வாழி செந்தில் வளம்பதியே
வாழி தெய்வத் திருத்தமிழே
வாழி யிந்த மகாத்மியமும்
வாழி இதனைக் கற்போர்கள்
வாழி கேட்போர் மாநிலத்தே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

மீனலோசனி
அச்சியந்திரசாலை
மதுரை.

ஆர்மோன்யம் கற்றுக்கொள்கிறவர்களுக்கு
செலவு ரூபாய் ஒன்றே.

# ஆர்மோன்ய அநுபவ
## சங்கீத ரத்னம்.

### இதுவரையிலும் இந்தமாதிரி வெளிவராதவை.

ஒருவர் சகாயமின்றித் தானே எளிதில் ஆர்மோன்யத்தைப் பழகிக் கொள்ளும்படி அநேகவிஷயங்களைத் தெரிந்தெடுத்து இடத்திற்குத் தகுந்தபடி உபகர்ணங்களைக் காண்பித்து ஸ்வராவளி, மேல்ஸ்தாயை வரிசை, ஜண்டவரிசை, அலங்காரம் காவடிச்சிந்து, பார்வி நோட், தேவாரம், திருவாசகம், திருவருட்பா, கீர்த்தனை இன்னும் அநேக பாடல்களைச் சேர்த்து அவைகளுக்குத் தகுந்தபடி ஸ்வரதாளங்களமைத்து கையில் ஆர்மோன்யத்தை எடுத்து முதல் இரண்டு கைகளாலும் மேடைகளில்வாசித்து ஆனந்திக்கும்வரை யுள்ள அநேக விஷயங்களைத் தெளிவாய் விவரித்துக்காட்டி எளியநடையில் நயம் கிளேஸ் காகிதத்தில் கிரவுன் 16 சைஸில் அச்சிட்டு 144 பக்கங்களோடு அழகிய பைண்டுடன் விற்பனைக்குத் தயாராயிருப்பதால் உடனே ஆர்டர்செய்து கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ 1—0—0.

மு. கிருஷ்ணபிள்ளை,
ஏஜண்டு,
பி. நா. சி. பிரதர்ஸ், புக்ஷாப், மதுரை.